ஜெம்ஸ் ஊழியத்தின்
ஜெபப் பங்காளர்களுக்கும்,
யுத்தசத்தம் வாசகர்கள்
மற்றும்
கிறிஸ்துவின் சரீரத்தில்
அங்கமான அனைவருக்கும்
இனிய கிறிஸ்மஸ்
நல்வாழ்த்துக்கள்.
ஜெம்ஸ் குடும்பத்தினர்

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெப பங்காளரே!

இருளில் நடக்கிற ஜனங்களைப் பெரிய வெளிச்சத்தைக் காணச் செய்பவரும், மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சத்தை பிரகாசிக்கப் பண்ணு கிறவருமாகிய தேவனுடைய இனிய நாமத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். நம்பிக்கையே இல்லாதோர்க்கு நம்பிக்கை வழங்குவது அல்லவோ இந்த கிறிஸ்துமஸ்-ன் செய்தி.

இது உலகெங்கும் கூறி அறிவிக்கப்பட வேண்டியதல்லோ! மாட்டுத் தொழுவில் உதித்தவரின் மாபெரும் மகிமைதனை, மாறி வரும் உலகத்திற்குக் கூவி அறிவிக்க அழைக்கப்பட்டவர்கள் நாம் என்பதனை நமக்கு மீண்டும் ஞாபகப்படுத்துவது அல்லவோ இந்த பண்டிகை நாட்கள்; மறந்துவிடவேண்டாம். கூடவே கிறிஸ்து பிறப்பின் மாட்சிமையையும் நாம் புரிந்துகொள்ளுதல் மிகவும் நல்லது.

தேவ குமாரன் வந்த நோக்கத்தினை விளக்கும் யோவான் **"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்"** (1யோவா. 3:8) என்று மகிழ்ச்சியூட்டும் செய்தியினை வழங்குகிறார். பிசாசானவன் **சோதனைக்காரன்** என்றும் (மத். 4:3), **மோசம் போக்குகிறவன்** என்றும் (வெளி. 20:2,10), **குற்றஞ்சாட்டுகிறவன்** என்றும் (வெளி. 12:10), **பொய்யன்** என்றும் (யோவா. 8:4), **அழிப்பவன்** என்றும் (யோவா. 10:10), **திருடன்** என்றும் (யோவா 10:10), **மரணத்திற்கு அதிபதி** என்றும் (எபி. 2:14) வேத புத்தகத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறான்.

அவனுடைய குணநலன்களை மையமாகக் கொண்டே இந்த பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளபடியால், அவனை அடையாளம் கண்டு கொள்வது நமக்கு எளிதாகிறது. அதனால்தான் வேதப்புத்தகத்தினை சத்துரு அதிகமாக வெறுக்கிறான். இந்தக் கிரியைகளை அழிக்கவே தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து வெளிப்பட்டார் என்கிற அறிவு நம்மை எச்சரிக்கைச் செய்வதோடு, அவனை அடையாளம் காட்டிக் கொடுக்கவும் போதுமானது. அவனை அடையாளம் காட்டிக் கொடுத்தால், அவனுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் பிடிக்காது என்பது மெய்தான். ஏனெனில், **தேவன் தாம் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று சொல்பவர்** (யாத். 3:14). **சாத்தானோ தான் இல்லை என்று கூறவே முற்பட்டு அநேகரை**

வஞ்சித்து ஏமாற்றி வருகிறான். தன்னை வெளிப்படுத்த விரும்பாதவன் அவன்; ஆனால், அவன் கிரியைகள் அவனைக் காட்டிக்கொடுக்கப் பலம் வாய்ந்தவை. எனவே, இந்த கிறிஸ்து பிறப்பின் நாட்களில் அதனை எழுதி உங்களை உற்சாகப்படுத்திவிட முடிவு செய்து இதனை எழுதுகின்றேன்.

அவனை சோதனைக்காரன் என்று கண்டோம். அவன் இயேசு கிறிஸ்துவை சோதித்த விதத்தினை வேதம் நமக்கு விளக்குகிறது. மத். 4-ம் அதிகாரம் 1 முதல் 11-ம் வசனங்கள் வரை வாசித்துப் பார்த்தால், அவன் அவரை சோதித்த மூன்று நிலைகளை நாம் காணலாம். அதனைக் குறித்து விளக்கங்கள் அநேகம் இருந்தாலும், **இன்றைய நாட்களில் அதே ஆயுதங்களை தினம் தினம் ஒவ்வொரு விசுவாசிகளின் மேலும் ஊழியர்கள் மேலும் உபயோகித்து வருகிறான்.** எனவே "சோதனைக்குட்படாமல்" தீமையினின்றுக் காக்கப்பட அவைகளை ஆராய்வது நலம் என எண்ணுகிறேன் (மத். 6:13).

முதலாவது சோதனை "கற்களை அப்பமாக்கத் தூண்டியதே". அது இன்றையக்கால வார்த்தைகளில் வர்ணிக்கப்பட்டால், "Quick money making" **துரிதமாக செல்வந்தனாக வாழத் தூண்டி விடுவதனையே குறிக்கும்.** இது உலகத்தினை ஆட்டிப்படைக்கும் ஓர் சக்தி; ஆனால், தேவ ஆவியான வரோ நமக்கு வேறு வழியினைச் சொல்லித் தருகிறார். "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி... என்றே போதிக்கிறது வேதம் (1 தீமோ. 6:9-11).

துரிதமாய் வரும் செல்வம் நிலைப்பதில்லை என்பதும், அநியாய வட்டியினாலும், ஆதாயத்தினாலும் வரும் செல்வம் அதை சம்பாதிப்பவனுக்குப் பலன் தருவதில்லை என்பதும் (நீதி. 28:8; 10:2) மனதில் கொள்ளவேண்டியவை. **சாத்தானோ இன்றைக்கு சடிதியாக சிலரை பணக்காரனாக வழி சொல்லித்தந்து, அதனை அநேகர் பின்பற்ற வைத்துவிடுகிறான். திருப்தியற்ற வாழ்க்கைக்கு இவை வழிநடத்தும்** என்று அறிந்த இயேசு அவனை ஜெயித்ததினால், நம்மைப் போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து இயேசு நமக்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 4:15; 2:18). இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நாமும் ஜெயிக்க முடியும் என்ற நினைவு நம்மைக் களிகூறப்பண்ணுவதாக. இதுவே பண்டிகையின் ஆர்ப்பரிப்பாகவும், கொண்டாட்டமாகவும் மாறுவதாக. அதுவே நம்மை ஆராயவும் போதுமான பலனுள்ளது. பத்து ரூபாய்க்கு வாங்கின ஒரு பொருளை நூறு ரூபாய்க்கு விற்று விட்டால், மனிதன் அதனை தன் திறமை என்று கூறி தன் மார்பில் தட்டிக் கொடுத்துக் கொள்கிறான்; ஆனால், அது ஒரு அபத்தம் என்பதனையோ, ஏமாற்று என்பதனையோ அவன் அறியா வண்ணம்

பொருளாசை கண்களை மறைத்து விடுகிறது.

ஆவிக்குரிய உலகிலும் இந்த உக்தி உபயோகப்படுத்தப்பட்டு, இந்த திட்டத்தில் இணைந்தால் உங்களுக்கு பெரிய ஆசீர்வாதம் வைக்கப்பட்டிருக்கிறது என்கிற வார்த்தைகள் அநேகரின் கண்களை மறைத்து விட்டக் கொடுமை உண்டு. சாத்தான் இயேசுவிடத்தில் கூறின "உம்முடைய உரிமையை உபயோகிக்கவும், உம்முடைய சொந்த பிரயோஜனத்திற்காக" என்ற பசப்பு வார்த்தைகள் செல்லுபடியாகவில்லை. ஆனால், பொருளாதார செழிப்பைப் போதிக்கும் அநேக போதகர்கள் **"உன் உரிமையை உபயோகப்படுத்தி செல்வந்தனாக மாறு" என்றே போதிக்கின்றனர்.** Quick money, Quick blessing என்ற குறிக்கோளே பின்பற்றப்படுகிறது. இது சாத்தானின் தந்திரம் என்பது அநேகருக்குத் தெரிவ தில்லை. இந்த நாட்களில் இதனைக் கண்டுகொள்ள கண்கள் திறக்கப்பட்டால் எத்தனை நலமாயிருக்கும். சத்துருவின் கிரியைகளை அழிக்க வெளிப்பட்ட தேவ குமாரன், அநேகருடைய இருதயத்தில் இதனை செய்யவேண்டிய அவசியம் உண்டு.

தேவாலயத்தின் உச்சியில் ஏற்றப்பட்டு, அங்கிருந்து குதிக்கச் சொல்லி இயேசுவை ஏவி சோதிக்க விரும்பின சாத்தான் என்ன செய்ய விரும்புகிறான். "Quick fame" **குறுக்கு வழியில் (யாருக்கும் பயன்படாத ஓர் வித்தையைச் செய்யச் சொல்லி) புகழை சம்பாதிக்க வழி காட்டுகிறான்; விளம்பர வித்தைகளைச் சொல்லித் தருகிறான். வசனம் தவறாக உபயோகப்படுத்தப்படுகிறது.** "பாதம் கல்லில் இடறாதபடி தூதர்கள் கைகளில் தாங்குவார்கள்" (சங். 91:12) என்ற வசனத்தை சாத்தான் தனக்கு சாதகமாக உபயோகித்து, "நடக்கும் போது" காக்க நியமித்த வாக்குத்தத்தத்தை "குதிக்கச் சொல்லி" நிரூபிக்கச் சொல்கிறான். இயேசு அதில் மயங்கிவிடவில்லை. குதிப்பதினால் யாருக்கும் பிரயோஜனப்படப்போவதில்லை என்பதனை அறிந்த அவர், அவனை எளிதாக ஜெயித்துவிடுகிறார். **மற்றவர்களுக்கு என்னால் என்ன பிரயோஜனம்? என்பதனை ஆராய முற்படும் எந்த மனிதனும் சத்துருவை அடையாளம் கண்டுகொள்வான்.**

"நான் என் சுய பிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி" (1 கொரி. 10:32) என்பது பவுலின் கோஷம்.

தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? (மல். 3:14) என்பது இன்று அநேகரு டைய கேள்வி. ஆனால், அவர்களுடைய ஆசையெல்லாம் தங்களுடைய பிரயோஜனத்திற்காக தேவன் அவர்களுக்கு ஆசீர்வாதம் தரவேண்டும் என்பதே. இந்த இழுப்பு அநேகரை தவறான புகழை பெறவே அழைத்துச் சென்று விட்டது.

இயேசு சொல்வது என்ன? **"மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது"**

(லூக். 16:15). **எத்தனை தேவ தாசர்கள் வழி விலகிப் போனார்கள். சொந்த மகிமையைத் தேடி அதற்காக தகாததனை, மற்றவர்களுக்கு உபயோகப்படாதவைகளை நடப்பித்து அதையே ஆவிக்குரிய போர்வையாக்கி, அதற்கேற்ற வசனங்களைத் தேடி கண்டுபிடித்து, தங்கள் ஆசைக்கேற்ப முன்னும் பின்னும் அதனை கத்தரித்து, தங்களை தேவனுடையவர்களாகவும், ஆவிக்குரியவர்களாகவும் காண்பித்து, தேவ தூதர்கள் தங்களை ஏற்றிக்கொண்டுப் போகிறது போன்ற போலியான எண்ணங்களை மக்கள் மத்தியில் கொண்டு வந்து மாயையைப் பின்பற்றி கிருபையை வீணடித்து விட்டார்கள்.**

இயேசு ஜெயமெடுத்ததினால், இப்படிப்பட்ட இச்சைகளிலிருந்து நம்மையும் காப்பாற்றவும், தீமைக்குட்படாமல் காக்கவும் வல்லவராயிருக்கிறார் (ரோ. 8:37). இந்த கிறிஸ்துமஸ் நம்மனைவரையும் இந்த சத்துருவின் உபாய தந்திரத்திற்குத் தப்புவித்தால், தந்திரத்தால் தாக்கப்படாமல் காக்க போது மானதாக இருக்குமே!

பண்டிகை நாட்களில் நம்முடைய பிரஸ்தாபத்தைக் காண்பிக்க முயலுவதனை விட, மற்றவர்களுக்காக பிரயோஜனப்படும் சிலக் காரியங்களைச் செய்தால் எத்தனை நலமாயிருக்கும். அது அநேகர் இரட்சகரை அறிந்து கொள்ள வல்லதாக இருக்குமே!

உலகத்தின் மகிமையைக் காண்பித்து, அதனைப் பெற இலகுவான மூன்றாவது சோதனையை இயேசுவுக்கு முன் கொண்டுவருகிறான். “Quick glory” அவனைப்பணிந்து கொண்டால் போதும் என்பதுதான் அவனின் ஆசை வார்த்தைகள். தேவனுக்கு மெய்யாக ஆராதனை செய்வதிலிருந்து ஜனத்தை திசை திருப்ப ஓயாமல் உழைக்கும் அவன், இதே ஆசை வார்த்தைகளையே இன்று கூறி தன்னை வணங்க வைத்து விட்டான். இதில் அநேக தேவ பிள்ளைகளும் விழுந்து கிடக்கின்ற பரிதாப நிகழ்ச்சி நம்மை உலுப்புமே!

எத்தனை கலப்பு உபதேசங்கள், உறவுகள், சம்பந்தங்கள், கலப்பு வாழ்க்கை குறைகள்? உலகில் மதிக்கப்படுவதோடு, உலகத்தின் பேர், புகழ், மகிமைக்காக ஏங்கும் ஊழியர்கள் எத்தனை? சரியாக நடை பெறாத பள்ளி ஒன்றுக்கு சிறந்த பள்ளி என்ற “ஆளுநர் பாராட்டு” (Governor’s honour) கிடைத்த போது, அதை நடத்திய ஒரு விசுவாச தம்பியை நான் கேட்டேன், எப்படி? என்று. அவன் சொன்ன வார்த்தை என்னைத் திடுக்கிட வைத்தது. “பணமும், ஆளும் கட்சியின் ஆட்களின் ஆதரவும் இருந்தால் இது எல்லாம் சர்வ சாதாரணம்” என்றான். அதனால் என்ன லாபம்? என்றேன். போகிற இடத்தில் தனக்குக் கிடைக்கும் மரியாதையும், உபசரிப்பும் எத்தனை என்றானே பார்க்க வேண்டும். இப்படி உலகத்தின் மகிமையைத் தேட பொய்யான, மாய்மாலமான வேடம் போடத் துணிபவர்கள் எத்தனை பேர்? இன்று அந்த பள்ளி மூடப்பட்டும் விட்டது. இந்த கேவலத்திற்கு பணத்தையும், விசுவாசத்தையும் பலியிட்டோர் எத்தனை பேர்? **அரசில் தங்களுக்கு அதிக ஆதரவு என்று காட்ட சுயமரியா தையையும், ஆவிக்குரியவைகளையும் பலியிட ஆயத்தமானக் கூட்டம்**

ஏராளமாக பெருகி வருகிறது. "கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" (2 கொரி. 10:18) என்பதல்லவோ உத்தமர்களின் வழி.

வீண் மகிமையைத் தேடவும், ஆவிக்குரிய பலத்தினை இழக்க ஆயத்தமானோர் எத்தனை பேர்? இந்த பண்டிகை நாட்கள் நம்மை அப்படிப்பட்டவைகளில் இருந்து காப்பதாக. அதனை அழிக்கப் புறப்பட்ட இயேசு நமக்குரியவரே.

கிறிஸ்துமஸ் தினத்தினை நினைவு கூறும் நாம், அதன் உண்மை பலனை அனுபவிக்கும் வண்ணம், அனைத்தையும் "Quick Noodles" **முறையிலேயே பெற முயற்சிக்கும் சகலவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்க தேவன் உதவுவாராக.**

பண்டிகை வீண் பெருமை கொள்ளவோ, வீண் ஆடம்பரங்களின் களியாட்டமாயிராமல், அநேகருடைய பிரயோஜனத்திற்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாக மாற்றப்படட்டும். **நம்முடைய உண்மை மகிழ்ச்சி உலகிற்கு உதவட்டும்.** உண்மையாக கிறிஸ்துவின் வருகை உலகின் சரித்திரத்தை மாற்றி, ஆவிக்குரிய தரித்திரத்தையும் மாற்றிய விந்தையை உலகு அறிய ஏதுவாகட்டும்.

சத்துருவின் கிரியைகளை அழிக்க வெளிப்பட்ட தேவ குமாரன் நம் உள்ளத்தில் பிறந்தது உண்மையானால், நம்மில் இந்த கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட இடந்தருவோம்.

இயேசு இந்த சோதனைகளை வென்றதினால், ஆவியானவருடைய பலத்தினால் ஊழியம் செய்யப் புறப்பட்டது போல நாமும் புறப்படுவோம் (லூக். 4:14) அதுவே இன்றைய தேவை. கிறிஸ்துமஸ்-ன் செய்தி அறியா கோடி கோடி மக்கள் அப்பொழுதே விடுவிக்கப்படுவர்; தேசம் தேவனை அறியும். இல்லையென்றால், இது ஒரு காந்தி ஜெயந்தி போலும், கிருஷ்ண ஜெயந்தி போலும், குருநானக் ஜெயந்தி போலவுமே மாறிவிடும். உலகும் அதைத்தான் புரிந்துகொள்ளும். நம்முடைய மனநிலையும், நடையுமே கிறிஸ்துவின் பிறப்பு மற்றவர்களைப் போல அல்லாது மறுரூபப்படுத்த உண்டான ஒன்று என்பதனை விளக்கும்.

பண்டிகை ஆராதனைகளில் கிறிஸ்துவை அறியாதவர் ஒருவரை அழைத்துச் செல்லுவோம்; முடிந்தால் அவருக்கும் புத்தாடை உடுத்துவித்து, அவரை புது ஜீவனில் வழிநடத்த தேவ கிருபை நம்மை ஆட்கொள்வதாக. இதனைத்தான் நாம் பணித்தளங்களில் செய்ய முயல்கிறோம். இதுவரை கொண்டாடிய பண்டிகையைப் போல இந்த பண்டிகை இல்லாதிருப்பதாக. புதுத் தீர்மானம், புது உடன்படிக்கை நம் ஆராதனைகளை நிரப்பட்டும்; உண்மை கிறிஸ்துமஸ் உலகிற்கு தெரியட்டும்.

கிடைக்கப் பெற்ற பணித்தளச் செய்திகள் அடிப்படையில் கிட்டத்தட்ட **25000 விசுவாசிகள்** நம்முடைய பல்வேறு கன்வென்ஷனில் கலந்து கொண்டு வசனத்தில் ஊன்றக் கட்டப்பட்டு, சவால் பெற்று "வெற்றியின் மேல் வெற்றி பெறும்" வாழ்வில் முன்னேற கர்த்தர் உதவி செய்தார். ஜெபித்த

உங்களுக்கு மனமார்ந்த நன்றி. அதனுடைய விளைவுகள் பணித்தளங்களில் வரும் நாட்களில் எதிரொலிக்கும். அதன் விளைவாக பீகாரும், அண்டை மாநிலங்களும் மருரூபமாகும் என்பதில் சந்தேகமில்லை.

இம்மாத இறுதியில் நடைபெறும் உபவாசக் கூடுகையில் **ஐந்தாம் பத்தாண்டுகளில்** பிரவேசிக்க ஆயத்தத்தோடு ஊழியர்கள் மூன்று நாட்கள் தேவ சமூகத்தில் காத்திருப்போம்; தேவ சத்தம் தெளிவாகக் கேட்க ஜெபியுங்கள். சத்துரு பல உக்திகளை கையாண்டு நம்முடைய வேகத்தினையும், வைராக்கியத்தையும் கெடுக்க எடுத்த அத்தனை முயற்சிகளையும் அவரின் பெலத்தால் ஆவிக்குரிய போர்முறைகளினால் மேற்கொண்டுவருகிறோம்; ஆயினும் சிலரை இழக்க நேரிட்டது. இடத்தினை நிரப்பவும், புதிதான பணிகளைச் செய்யவும் ஆட்கள் தேவை.

தமிழகம் தரமானவர்களை எழுப்பித் தந்துதான் ஆகவேண்டும்; ஏனெனில், அதிகம் கொடுக்கபட்டவர்களிடத்தில் அதிகம் கேட்கப்படுவது தேவ சட்டம் அல்லவா! **அர்ப்பணித்தோரும், ஆற்றல் மிக்கவரும், செயல் வீரரும் எழும்பியே ஆகவேண்டும். எல்லா துறை களிலும் ஆட்கள் தேவை.** அவரின் கையசைவு அதனைச் செய்யுமாதலால், அவரின் கைகளை நாம் அசைப்போம்; அதனை ஜெபமே செய்யும். ஜெப வீரர்கள் அவர் "எருசலேமை ஸ்திரப்படுத்தும் வரை அவரை அமர்ந்திருக்கப் பண்ணாதிருப்பார்களாக!" (ஏசா. 62:7). அவர் மந்தை பெருகுவது போல மனிதரைப் பெருகப்பண்ண நாம் விண்ணப்பம் பண்ண வேண்டும் என்பது அவரின் எதிர்பார்ப்பு (எசே. 36:37).

சத்துருவின் கிரியைகளை அழிக்கவே வெளிப்பட்டார் தேவகுமாரன்
சந்து பொந்துகளிலும் கூறி அறிவிப்போம் அனுதினம்
பண்டிகை ஆசரிப்பில் அலகின் கிரியைகள் அழிவை
பட்டணத்தாரும் பக்கத்து வீட்டாரும் காணட்டும்
உலகம் செல்லும் வழியல்ல நம் வழி உணர்ந்திடுவோம் நாமும்
உயிர் தந்தவரின் உள்ளம் துளிரட்டும் நம் நடக்கையால்
புகழ், மகிமை, பணம் அனைத்தையும் ஏற்றுவோம் பலிபீடத்தில்
புவி ஆளும் பரமனின் பிறப்பில் மகிழ்வோம் பண்டிகையில்
அழிம்பன் சத்துருவின் அதிகாரம் முடிவடைய
அம்பலமாக்குவோம் அவரின் வெற்றிதனை புவி அறிய
கொண்டாட்டம் கொள்கை கொண்டதாகட்டும்
கொக்கரிக்கும் சாத்தானின் கொட்டம் அடங்கட்டும்!

அன்பரின் அறுவடைப் பணியில்

அன்பு சகோதரன்

***D.*அகஸ்டின் ஜெபக்குமார்**



ஊழியத்தை நிறைவேற்று

சகோ. D.அகஸ்டின் ஜெபக்குமார்

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். (யோவா 17:4)

மனுக்குலத்தை மீட்கும்படி இந்த உலகத்தில் மனிதனாய் அவதரித்து, நம்மைப் போல பாடுகளைச் சகித்த இயேசு, பிதா தனக்கு நியமித்திருந்த காரியங்களை முற்றிலும் பரிபூரணமாக நிறைவேற்றிய பின்னரே "முடிந்தது" என்று சொல்லி தலையைச் சாய்த்து ஆவியை பிதாவின் கையில் ஒப்புக் கொடுத்தார் (யோவா 19:30). கிறிஸ்து பிறப்பின் நாளை ஆசரிக்கிற நாமும் நமது வாழ்க்கையில் இயேசுவைப் போல நமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றி அவரண்டை சேருகிறவர்களாகக் காணப்பட அர்ப்பணிக்கவேண்டியது அவசியம்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, **நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று** (2 தீமோ. 4:5) என்று ஊழியத்தினை நிறைவேற்றும் விதத்தினைக் குறித்தே எழுதுகின்றார். அப்போஸ்தலனாகிய பவுல் தனது ஊழிய ஓட்டத்தின் கடைசி நேரத்தில் வந்த போது, தேவனுக்காக தான் செய்த பல காரியங்களை திரும்பிப் பார்க்கிறார். வாழ்க்கையின் கடைசி நேரத்திலும், நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்; இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது (2 தீமோ 4:7-8) என்று உற்சாகமாகக் கூறுகின்றார். நான் என் கரங்களில் கொடுக்கப்பட்ட காரியங்களை செய்திருக்கின்றேனா? எனக்கு நியமிக்கப்பட்டிருந்தவைகளை நிறைவேற்றியிருக்கின்றேனா? என்பதை ஆராய்ந்தவராக, நான் அதை செய்து முடித்திருக்கிறேன் என்று வெற்றி முழக்கமிடுகிறார். இயேசுவும், "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" (யோவா. 17:4) என்று பிதாவை நோக்கி கூறினதுடன், அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது "எல்லாம் முடிந்தது" (யோவா. 19:28) என்றும் கூறினார். இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் இவ்வாறே தங்கள் வாழ்க்கையை முடிக்கின்றனர். நம்முடைய வாழ்க்கை ஓட்டத்தின் கடைசி பகுதிகளில் நாமும் இப்படிச் சொல்லவேண்டும். "நான் எனது ஓட்டத்தை முடித்தேன், எனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றினேன், எல்லாவற்றிலும் நான் உண்மையுள்ளவனாயிருந்தேன்" என்ற நிச்சயம் நமது வாழ்க்கையிலே உண்டாயிருக்க வேண்டும்.

ஊழியமும் நம்முடைய வாழ்க்கையும் தொடர் ஓட்டத்திற்கு ஒப்பானது. தொடர் ஓட்டத்தில், சிகப்பு அணியினைச் சேர்ந்தவன் ஓடி தன்னுடையதை தனது அணியிலுள்ள இன்னொருவனுக்குக் கொடுக்க முயற்சி எடுப்பான்.

அப்படியே அணியினைச் சேர்ந்தவன் ஓடி தன்னுடையதை தனது அணியிலுள்ள அடுத்தவனுக்குக் கொடுக்க முயற்சிப்பான். அப்படியே, மஞ்சள் அணியினைச் சேர்ந்தவனும் தனது அணியிலுள்ளவனுடைய கையிலேயே கொடுப்பான். சிகப்பு அணியிலுள்ளவன் வேகமாக ஓடி தனது அணியிலுள்ளவனைக் காட்டிலும், மஞ்சள் அணியிலுள்ளவன் நன்றாக ஓடுவான் என எண்ணி அவன் கையிலே தன்னுடையதைக் கொடுப்பான் என்றால், இரண்டு அணியுமே தோற்றுப்போகும். ஊழியமும் வாழ்க்கையும் அப்படிப்பட்டதே. பவுல் தனது ஓட்டத்தின் இறுதியில் தனது வாழ்க்கையின் காரியங்களை நோக்கிப் பார்க்கிறார், அப்படியே தனக்குப் பின்னர், அதனைத் தொடர்ந்து செய்யப்போகின்ற தீமோத்தேயுவையும் பார்க்கின்றார். தீமோத்தேயு பவுலோடு கூட ஊழியத்தில் இருந்தவன். பவுலின் ஊழியத்தில் இடையில் வந்து தீமோத்தேயு இணைந்திருந்தாலும் பவுலின் எல்லா காரியங்களையும் அறிந்திருந்தான். **நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்** (2 தீமோ. 3:10,11) என்று எல்லாவிதத்திலும் தன்னோடு உடனிருந்த தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகின்றார்.

அத்துடன், **நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று** (2 தீமோ. 4:5) என்று நான்கு காரியங்களை தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகின்றார்.

மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி: தேவையில்லாத காரியங்களை உன்னைச் சுற்றி உண்டாக்குகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவே நீ மனத்தெளிவுள்ளவனாயிரு என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகின்றார். ஜனங்களின் செவிக்கு இனிமையாகப் பிரசிங்கிக்கிறவர்கள் நான்கு புறமும் எழும்பிவிடுவார்கள்; ஜனங்கள் எப்படி விரும்புகிறார்களோ அப்படி பிரசங்கிக்கிறவர்கள் எழும்புவார்கள்; எனவே தீமோத்தேயுவே நீ மனத்தெளிவுள்ளவனாயிரு. அப்படிப்பட்டவைகளில் சிக்கிக்கொள்ளாதே என்றும், மேலும் தீங்கனுபவி என்று ஆலோசனை கூறுகின்றார். உலகத்தை விட்டு பிரியும் போது, “மகனே, நான் உலகத்தை விட்டு போகிறேன்; ஆனால், நீ துன்பப்பட வேண்டியதிருக்கும்” என்று தந்தை மகனிடம் சொன்னால் அதை மகன் விரும்புவானோ? ஊழியன் தனது ஒவ்வொரு ஊழியப் பகுதிகளிலும் வித்தியாசமான துன்பங்களை துக்கங்களை அனுபவிக்க நேரிடும்.

நான் தற்போது இங்கிலாந்து சென்றபோது ஏறக்குறைய இருபத்துநான்கு மணி நேரம் விமானத்தில் பிரயாணப்பட வேண்டியதிருந்தது. தொடர்ந்து உட்கார்ந்திருந்ததினால் எனது கால்கள் இரண்டும் வீங்கிவிட்டன. விமானத்தை விட்டு இறங்கும் போது, எனது காலை ஷுவில் நுழைக்க முடியாமல் போயிற்று. ஷுவை கையில் எடுத்துக்கொண்டு செல்ல முடியாது, எனவே சாக்ஸ்-ஐ கழற்றிவிட்டு வெறுங்காலில் ஷுவை அணிந்தவனாக இங்கிலாந்து விமான நிலையத்தில் நடந்து சென்றேன். இங்கிலாந்தின் ஹீத்ரோ விமான நிலையத்தில் நான் சாக்ஸ் இல்லாதவனாக நடந்து சென்ற போது, அங்கிருந்தவர்கள்

என்னை வித்தியாசமாகப் பார்த்தார்கள்; எனக்கு வெட்கமாயிருந்தது. ஊழியத்தின் தொடக்கத்தில் வித்தியாசமான துக்கங்களை அனுபவித்தேன், துன்பங்களைச் சந்தித்தேன். ஆனால், இப்போது எனக்கு இருக்கிற கஷ்டங்கள் வித்தியாசமானது; நான் அவைகளை அனுபவித்தே ஆகவேண்டும். பெரியவனான பின்னர், பணம் வந்த பின்னர் மற்றும் மற்ற காரியங்கள் கிடைத்த பின்னர் நான் தீங்கு அனுபவிப்பது எப்படி? என்று நாம் நினைத்துவிடக் கூடாது.

ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி. 1:29) என்றே வேதம் நமக்குப் போதிக்கின்றது. ஆனால், இன்றைய நாட்களில், கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற நாம் தீங்கனுபவிக்க வேண்டிய அவசியமில்லை என்று தவறாக எண்ணிவிடக் கூடாது.

சுவிசேஷகனுடைய வேலையைச் செய்: எந்நேரத்திலும், எவ்விதத்திலும், வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் சுவிசேஷம் அறிவிக்கும் பணியினை நாம் நிறுத்திவிடக் கூடாது, வாழ்க்கையின் கடைசிவரை அதனை தொடர்ந்து செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று மேலும் ஒரு காரியத்தினை தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்துகின்றார். தீமோத்தேயு பவுலோடு உடன் ஊழியம் செய்தவன். பவுலுக்கு ஊழியத்தில் உதவி செய்தவன். ஆனால், சில நாட்களுக்குப் பின்னர் பட்டணங்கள் எங்கும் மூப்பர்களை நியமிக்க ஏற்படுத்தப்பட்ட மனிதனாக தீமோத்தேயு மாறினான் என்ற போதிலும், சுவிசேஷகனுடைய வேலையைச் செய் என்று பவுல் ஞாபகப்படுத்துகின்றார். இயேசுவுக்குப் பின்னால் செல்கின்ற ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டிய அவசியமுண்டு. நாம் எத்தனைப் பெரிய இடத்திலிருந்தாலும், நமது கரங்களில் எத்தனை பேர் கொடுக்கப்பட்டாலும், நாமும் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது; அது நம்மேல் விழுந்த கடமை; எந்த விலைக்கிரையம் கொடுக்க நேரிட்டாலும் அப்பணியினை நாம் கிறிஸ்துவுக்காக நிறைவேற்றியே ஆக வேண்டும்.

உன் ஊழியத்தை நிறைவேற்று: நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊழியத்தை அறிந்து கொண்டால் மாத்திரமே, அதனை நிறைவேற்றும்படி நாம் தொடர்ந்து முன்னேற இயலும். நமக்கென்று தேவன் வைத்திருக்கும் ஊழியத்தை அறிந்து கொண்ட பின்னர், தெரிந்து கொண்ட பின்னர் அதனை நிறைவேற்றும் ஏக்கம் நம்மில் உண்டாக வேண்டும். தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நமது வாழ்நாளில் நிறைவேற்றும் வாஞ்சை நமது வாழ்க்கையில் பெருக வேண்டும். எல்லாருக்கும் எல்லாவிதமான ஊழியமும் கொடுக்கப்படவில்லை. என்ற போதிலும், சரீரமாகிய கிறிஸ்துவில் அங்கமாயிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் வித்தியாச வித்தியாசமான ஊழியங்களைத் தேவன் கொடுத்திருக்கின்றார். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது, ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைக்கப்பட்டு, அவரது சரீரத்தின் ஒரு அங்கமாக மாறிவிடுகின்றோம். அங்கங்களாக மாறிய ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு பொறுப்பு உண்டு, ஒவ்வொரு வேலை உண்டு. எனவே, ஒவ்வொரு விசுவாசியும் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலை அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலையை முழுவதும் செய்து முடிக்கும்படி முன்னேற வேண்டும். நம்முடைய வேலை என்ன என்று நாம் அறிந்து கொள்ளும் வரை நாம் எதையும் செய்ய முடியாது; கிறிஸ்துவுக்காக

நாம் செயல்படவும் முடியாது. நம்மிடத்தில் எந்த வேலை கொடுக்கப்பட்டதோ அந்த வேலையைப் பற்றியே தேவன் நம்மிடத்தில் கணக்குக் கேட்பார்; நமக்குக் கொடுக்கப்படாத வேலையை "நீ ஏன் செய்யவில்லை" என்று தேவன் ஒருபோதும் கேட்பவரல்ல.

பவுல் தீமோத்தேயுவை நோக்கி, **'எந்த வேலையை கர்த்தர் உனக்குக் கொடுத்தாரோ, அந்த ஊழியத்தை நிறைவேற்று'** என்று ஆலோசனை கூறுகின்றார். தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் அநேகர் தவறி விடுகிறார்கள். பலர் அதனை கடினமாக எண்ணுகின்றனர். ஏன் ஜனங்கள் தன்னிடத்தில் கொடுக்கப்பட்ட வேலையினை நிறைவேற்றாமல் போகிறார்கள் என்பதற்கு, **ஆறு காரணங்களை** நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பயம்: இன்று பயத்தினாலேயே அநேகர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையினை முழுவதும் செய்து முடிக்க இயலாமல் போய்விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தேவன் தங்களுக்குக் கொடுத்த பொறுப்பை நிறைவேற்றா மல் பாதியிலேயே விட்டுவிடுகின்றனர். எனவே, தேவ வசனங்கள் பயப்படாதே, பயப்படாதே, பயப்படாதே என்று திரும்பத் திரும்ப நம்மை தைரியப்படுத்துகின்றன. பயப்படுகிறவனால் தனது வேலையினை நிறைவேற்ற இயலாது. **தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்** (2 தீமோ. 1:7). பயம் சாத்தானிடத்திலிருந்து வருகின்றது. சாத்தான் பயமுறுத்துகிறது மாத்திரமல்ல, பயத்தை நமக்குள்ளே விதைக்கிறவன். இயேசு நமக்குள்ளே இருப்பதால் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலையை நிறைவேற்றி, நமக்காக வைக்கப்பட்டிருக்கின்ற பரிசுப் பொருளை நாம் பெறவேண்டும் எனவே நாம் பயப்படக்கூடாது.

அவிசுவாசம்: தேவன் நமக்குக் கொடுத்தவைகளை நிறைவேற்ற இயலாதபடிக்கு, அநேக வேளைகளில் நமக்குள்ளே உண்டாகும் அவிசுவாசம் தடையாக்கி விடுகின்றது. சூழ்நிலைகளைப் பார்த்து நாம் அவிசுவாசப்பட்டு விடுகின்றோம். இயேசு தண்ணீரின் மேல் நடந்துவருவதை படகில் இருந்த பேதுரு கண்டான்; முதலில் எல்லோரும் பயந்தார்கள். இயேசு என்பதை அறிந்து கொண்ட பேதுரு, "ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான் (மத் 14:28,29). ஆனால், அவனுக்குள் அவிசுவாசம் வந்தபோது அவன் மூழ்கத் தொடங்கினான். நம்மில் அநேகருடைய நிலை இதுவே. முதலில் சந்தோஷமாக தங்கள் ஊழியத்தைத் தொடங்கின பலர், தங்கள் எதிர்காலம் என்ன ஆகும்? நம்முடைய வாழ்க்கை என்னவாகும்? எனது பிள்ளைகளின் நிலை என்ன ஆகும்? என்பதை நினைத்து நினைத்து அவிசுவாசத்தினால் இடையிலேயே தங்களுக்குத் தேவன் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்ற இயலாமல் மூழ்கி விடுகின்றனர்.

உலகத்தைப் பற்றிய சிந்தை: கவலை நமது வாழ்க்கையில் அவிசுவாசத் தைக் கொண்டுவந்து விடுகின்றது. பயம், அவிசுவாசம், கவலை இந்த மூன்றும் ஒருங்கிணைந்தே நமது வாழ்க்கையைத் தாக்குகின்றன; அதில் சிக்கியோரை அவர்கள் இலக்கை அடையவிடாதபடி வீழ்த்திவிடுகின்றன. அவர் உங்களை

விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (1பேது 5:7). நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலி 4:6) என்று வேத வசனங்கள் நமக்கு வாழவும் கிறிஸ்துவினால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தினை நிறைவேற்றவும் வழிகாட்டியும், உலக சிந்தைகளில் மூழ்கி கவலை கொண்டு பலரது விசுவாசக் கப்பல் கவிழ்ந்து விடுகின்றது; அவர்களது ஊழியமும் நிறைவேறாது போய் விடுகின்றது. உலகத்தைப் பற்றிய சிந்தை நம்மைக் கிறிஸ்துவினிடமிருந்து பிரித்துவிடும்.

ஜனங்களைக் குறித்த பயம்: ஜனங்களைக் குறித்த பயம், சுற்றியிருப்பவர்களைக் குறித்த பயம் நம்மைக் கவ்விப் பிடிக்கும்போதும் நமது ஓட்டத்தை நாம் நிறைவேற்ற இயலாமல் போய் விடுவோம். எதைச் செய்தாலும், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று பயந்து அநேகர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றாமல் போய் விட்டனர். நான் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தேன், அந்த வீட்டிலுள்ள சிறு பெண் என்னைப் பார்த்து, "அங்கிள் நீங்க டீவியில வர்ற அங்கிள் தான" என்று கேட்டாள், நான் ஆம் என்றேன். அப்போது அந்த வீட்டில் எனக்கு இனிப்பு கொடுக்கப்பட்டது. அந்த இனிப்பில் ஒன்றை எடுத்து அதனை அந்த சிறு பெண்ணுக்குக் கொடுத்தேன்; அந்த இனிப்பு அவளுக்குப் பிடித்திருந்த போதிலும், அவள் வாங்க மறுத்தாள். ஏன் என்று கேட்டேன்; அம்மா யாரிடமும் எதுவும் வாங்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னாள். மற்றவர்களைக் குறித்த பயம் சில நேரங்களில், நல்ல நபர்கள் நமக்கு நன்மையானவைகளைக் கொடுப்பதைக் கூட பெற்றுக்கொள்ள முடியாதபடிக்கு நம்மை மாற்றி விடுகின்றது. அப்படியே, நாம் போய் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர இயலாதபடி ஜனங்களைக் குறித்த பயம் நம்மை தடுத்து விடுகின்றது. இயேசுவைப் போல, பவுலைப் போல நாமும் "என்னுடைய ஓட்டத்தை நான் நிறைவேற்றினேன்" என்று சொல்லுபவர்களாக மாற வேண்டும்.

விமர்சனங்கள்: விமர்சனங்களை அநேகர் விரும்புவதில்லை. அவர்களுடைய வேலையைப் பற்றியோ, ஊழியங்களைக் குறித்தோ, சுபாவத்தைக் குறித்தோ மற்றெந்த காரியங்களைக் குறித்தோ யாராவது விமர்சித்து விட்டால் உடனே அப்படியே தங்களுடைய காரியத்தை முழுவதும் நிறைவேற்ற மனமற்றவர்களாக அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுவார்கள். நம்மை தேவன் வெவ்வேறு வேலைகளுக்கென்று அழைத்திருக்கின்றார். விமர்சனங்களையே நாம் நினைத்துக் கொண்டிருந்தால், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலையை நாம் நிறைவேற்ற முடியாது; அதிலிருந்து நாம் வெளியே வரவேண்டும். விமர்சனங்களினால் வழிமறிக்கப்பட்டு, அதையே சிந்தித்து சிந்தித்து செய்ய வேண்டிய எஞ்சிய ஊழியங்களைக் கூட செய்ய மனதின்றி, இடையிலேயே போய்விடும் நிலை பலரது வாழ்க்கையில் ஏற்பட்டு விடுகின்றது. இதற்கு நாம் தப்பி நமது ஊழியங்களை நிறைவேற்றவே நாம் அழைக்கப்பட்டோம் என்ற அர்ப்பணிப்போடு முன்னேற வேண்டும்.

பாவம்: பாவம் நமது வாழ்க்கையில் மீண்டும் நுழைந்துவிட்டால், அது நமது ஓட்டத்தை நிறைவேற்ற விடாது. தேவனுக்காக பணி செய்கிற ஊழியர்களை பாவத்தில் வீழ்த்த சத்துரு பல எத்தனங்களை வகுத்து வருகின்றான்.

பரிசுத்தம் என்பதே நமது ஆயுதம், அது தேவனின் குணம்; தேவன் பரிசுத்தராக இருக்கின்றாரே. எனவே, **'மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'** (எபி. 12:1).

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

(Director of Missions, Gems,Bihar) *அவர்கள்*

பங்குபெறும் கூட்டங்கள்

ஜெபியுங்கள்! *பங்குபெறுங்கள்!!*

நாள்	இடம்	தொடர்பு
11, 12, 13-11-2011 Friday, Saturday, Sunday Daily **6.30**. P.M. Nov. 12th Saturday **10**.A.M. To **2.00** P.M.	**AHMADABAD** Pastor's Meeting: **GANDHI NAGAR**	094270 13463 094274 45936
ஜனவரி 12 வியாழன் மாலை 6.00 மணிக்கு	A.L.C. **கிறிஸ்துநாதர் சபை வளாகம்,** Block 19, **Neyveli.**	**GEMS, Neyveli** 94422 53626 94867 90633 94435 39498 94430 51352
ஜனவரி 13, 14, 15 வெள்ளி, சனி, ஞாயிறு தினமும் மாலை 6.00 மணிக்கு சனி காலை 10 To 1 **குடும்பக் கூடுகை**	A.J.C. **பள்ளி வளாகம்,** LBS ரோடு, **கும்பகோணம்.**	94433 72078 99940 32360
ஜனவரி 16 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு	T.E.L.C. **ஆலய வளாகம்,** மணிக்கூண்டு அருகில், **பட்டுக்கோட்டை.**	98948 69840
January 20, 21, 22-01-2012 Friday, Saturday, Sunday Daily **5.30 To 8.30** P.M. சனிக்கிழமை காலை 10 To 1 **குடும்பக் கூடுகை**	Donbosco Hall, BalMatta, Hampankatta Road, **MANGALORE.**	9740547453 9036137993
January 27, 28, 29 Friday, Saturday, Sunday	**Rajendran Mydhan,** **ERNAKULAM**	94472 00573 094863 57950 90373 35829
பிப். 2 வியாழன் மாலை 5.30 மணி	Town Hall, ரயில் நிலையம் அருகில், **திருப்பூர்.**	98422 98244 90420 87100 94874 79530 98652 40498
பிப். 3, 4, 5 வெள்ளி, சனி, ஞாயிறு ❖ தினமும் மாலை 6.00 மணி	வ.உ.சி. மைதானம், அவினாசி ரோடு, **கோயம்புத்தூர்.**	93448 24072 0422 - 2405902

அம்பிகாபூர்
சுவிசேஷ கூட்டங்கள்
आनन्द में
லக்னோ

பெண்கள் கூடுகை

கன்வென்ஷன் - போஜ்புரி-2



தலைவர்கள் பயிற்சி முகாம்

சுவிசேஷ கூட்டங்கள்

அம்பிகாபூர் & லக்னோ

சத்தீஷ்கட் மாநிலம், அம்பிகாபூரில் நவம்பர் 4 முதல் 6 வரை நடைபெற்ற படைமுயற்சிக் கூட்டங்களில் தேவக் கிரியை வெளிப்பட்டது. அம்பிகாபூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கும் அதிகமான சபைகளைச் சேர்ந்த விசுவாசிகள் இக்கூட்டங்களில் பங்கேற்றனர். குளிர்காலமாயிருந்தபோதிலும்,வசனத்தைக் கேட்க ஒவ்வொரு நாளும் சுமார் 5000 பேர் கூடிவந்தனர். மாலைக்கூட்டங்களிலும், பகற் கூட்டங்களிலும் மற்றும் மைதானத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையிலும், சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்கள் கர்த்தரின் வசனத்தைப் பிரசங்கித்த போது, பலர் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்ததோடு, அவருக்காக செயல்படவும் முன்வந்து ஒப்புக்கொடுத்தனர். அன்று காலை 6 மணிக்கு மைதானத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் பல்வேறு சபையினர் ஒன்றாக இணைந்து ஆராதித்தது பரலோக தேவனை மகிமைப்படுத்துவதாக அமைந்தது, இந்த ஆராதனையிலும் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் கர்த்தரின் வார்த்தையைப் போதித்தார். கனடா மற்றும் சிங்கப்பூரை சேர்ந்த நமது ஜெபப் பங்காளர்களும் இக்கூட்டங்களில் பங்கேற்று ஜெப தேவையுடன் வந்திருந்த மக்கள் ஒவ்வொருவருக்காகவும் கூட்ட முடிவில் ஜெபித்தனர். பிசாசின் பிடியிலிருந்த அநேகர் விடுவிக்கப்பட்டனர். ஜெம்ஸ் வாலிபர் குழுவினர் நடத்திய பாவனை நடனங்களும் மக்களை கிறிஸ்துவுக்காக தேசத்தில் செயல்படும்படித் தூண்டின.

மேலும், லக்னோ (உ.பி) பட்டணத்தில் நவம்பர் 17 முதல் 20 வரை நடைபெற்ற சுவிசேஷக் கூட்டங்களும் அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தியது. இக்கூட்டங்களில் சுமார் 3000 பேர் வசனத்தைக் கேட்க கூடி வந்தனர். சகோ. **மோகன் சி.லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள்) மற்றும் சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** ஆகியோர் கர்த்தரின் வசனத்தைப் பிரசங்கித்தனர். செய்தியின் முடிவில் பலர் முன்வந்து தங்களை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்தனர். வியாதியின் பிடியிலிருந்த பலரைக் கர்த்தர் அற்புதமாக விடுவித்தார். அற்புதங்களைப் பெற்றோர் மேடையில் சாட்சி கூறி தேவ நாமத்தை மகிமைப்படுத்தினர்.

WET *ஊழியங்கள் - பெண்கள் கூடுகை*

"விழித்தெழுந்து எழுப்புதலைக் கொண்டு வா, மறந்து விடாதே தாயே" என்ற தலைப்பினை மையமாகக் கொண்டு, நவம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று நாட்கள் பெண்களுக்கான சிறப்புக் கூடுகை சிக்காரியாவில் நடத்தப்பட்டது. பீஹார், ஜார்க்கண்ட், நேபாள், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநிலங்களிலிருந்து, ஜெம்ஸ்-ன் அனைத்து கோட்டங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பயிற்றுவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 600க்கும் மேற்பட்ட விசுவாச சகோதரிகள் இக்கூடுகையில் பங்கேற்றனர். சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார். WET இயக்குநர் சகோதரி ரூபலேகா ஜெபக்குமார், சகோதரி ஜெயவதனா (ஆரா) மற்றும் சகோதரி ரமலா பாபு (நாகர்கோவில்) ஆகியோர் விசேஷ செய்தியாளர்களாகப் பங்கேற்று கர்த்தரின் வசனத்தைப் பிரசங்கித்தனர். கிதியோனைப் பற்றிய சிந்தனைகள் மற்றும் "தாயே தூங்கி விடாதே, மறந்து விடாதே, சோம்பேரியாய் இராதே" என்ற தலைப்புகளின்

கீழ் கொடுக்கப்பட்ட செய்திகள் பெண்களை அவர்கள் வாழும் பகுதிகளில் கிறிஸ்துவுக்காகச் செயல்படும்படி உற்சாகப்படுத்தியது. பங்கேற்றோர் 40 குழுக் களாகப் பிரிக்கப்பட்டு தற்பரிசோதனை மற்றும் பாடுகள் மத்தியில் தேவனுடைய ஒத்தாசையோடு மேற்கொள்வது எப்படி என்ற தலைப்புகளின் கீழ் தங்களை ஆராய்ந்து அர்ப்பணித்தனர். சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் வழங்கிய செய்தி ஜெபத்தைப் பற்றிய விழிப்புணர்வை பெண்களிடையே உண்டாக்கியது. குறு நாடகங்கள், பாவனை நடனங்கள், படக்காட்சிகள், குழு கலந்துரையாடல்கள் என பல்வேறு அம்சங்கள் பெண்கள் ஆர்வமுடன் இக்கூடுகையில் பங்கேற்க துணைபுரிந்தன. தேவனுடைய சுவிசேஷ ஒளி அந்தகாரமாயிருந்த பீஹாரில் சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் மூலம் கடந்து வந்து பின்னர் சகோதரி ரூபலேகா ஜெபக்குமார் மூலமாக பெண்கள் மத்தியில் பரவிய விதத்தை விளக்கும் வண்ணம் மெழுகுவர்த்திகளை ஏற்றி, அனைத்து சகோதரிகளுக்கும் அதனைப் பரவச் செய்து, சுவிசேஷ ஒளி யினை நாம் தேசத்தில் பரவச் செய்ய வேண்டும் என்ற உறுதிமொழியோடு சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் ஜெபத்தில் நடத்திய போது, ஜனங்கள் தேவ பிரசன்னத்தை உணர்ந்தனர். தெற்கு, வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஜெம்ஸ் மண்டலங்களைச் சார்ந்த ஐந்து சகோதரிகள் இக்கூட்டத்தின் மூலமாக தாங்கள் பெற்ற நன்மைகளை சாட்சிகளாக பகிர்ந்து கொண்டனர். தேவ நாமம் இக்கூட்டங்களின் வாயிலாக மகிமைப்பட்டது.

கன்வென்ஷன் போஜ்புரி II

போஜ்புரி-2 கோட்ட கன்வென்ஷன் கூட்டங்கள் நவம்பர் 11-13 வரையிலான நாட்கள் கருவந்தியா பணித்தளத்தில் நடைபெற்றது; சுமார் 2000 விசுவாசிகள் பங்கேற்றனர். சகோ. பெல்ஷாத் மற்றும் சகோ. டெனிஸ் குழுவினர் பாடல்கள் மற்றும் ஆராதனையினை நடத்தினர். வாலிபர்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்களுக்கென தனித்தனியே சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சகோதரி ரூபலேகா ஜெபக்குமார், போதகர் எபனேசர் (திருச்சி) மற்றும் போதகர் மதன் ரிச்சட் (சென்னை) ஆகியோர் கர்த்தரின் செய்தியினை வழங்கினர். கடைசி நாள் கூட்டத்தில் சகோ. கொர்நேலியுஸ், சகோ. பிரட்ரிக், சகோதரி புஷ்பா, சகோ. ஜேசுதாஸ் மற்றும் மேற்கு மண்டல இயக்குநர் சகோ. மரியதாஸ் ஆகி யோர் கர்த்தரின் வார்த்தையினைப் பகிர்ந்து கொண்டனர். இக்கன்வென்ஷன் கூட்டங்கள் பணித்தளத்திலிருந்து வந்திருந்த ஒவ்வொரு சபை விசுவாசிகளை யும் பலப்படுத்தியது.

தலைவர்கள் பயிற்சி முகாம்

மத்திய மற்றும் தென் மண்டல தலைவர்களுக்கான நான்காம் கட்ட பயிற்சி முகாம் நவம்பர் 9,10,11 ஆகிய தினங்களில் கச்சுவா-வில் (உ.பி) நடை பெற்றது. Led for Leaders என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் 60 தலைவர்கள் பங்கேற்றனர். CMAI Ministries–ஐச் சேர்ந்த Dr. J.S.அன்பு மற்றும் Prof. S.D. ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு பயிற்சியாளர்களாக கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளின் கீழ் தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.Dr. அசோக் மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். தின-மும் காலை தியானத்தின் போது தென்மண்டல இயக்குனர் சகோ. ஜெயசிங் டேவிட் நடைமுறை வாழ்க்கையில் வேத வசனத்துக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்வது எப்படி என போதித்தார். மத்திய மண்டல இயக்குநர் சகோ. எமர்சன் பயிற்சி முகாமை ஒருங்கிணைத்து நடத்தினார். குழு கலந்துரையாடல்கள் தலைவர்-களை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நேராய் நடத்தின. மூன்று நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புகள் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தன.

பணித்தளச் செய்திகள்

(டிசம்பர் - 2011)

PEACE-I கோட்டம்

டிசம்பர் 15 **கிஷர்சராய்** யாக் 5:16

பூமிடோலா - லலன்மாஜி, சத்மாகஸ் - ரன்ஜீத்மாஜி, மவுவாரி - சனதர்கான்த், சாலாஜ்பூர் - அனில்குமார், பத்தேபூர் - கனேஷ்பாஸ்வான், ராம்நகர்தியார் - அமர்ஜீத்தாஸ் ஆகியோரது வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சுமார் 200 பேர் இக்கூடுகைகளில் கலந்து கொள்கின்றனர். மந்திரவாதியாகவும், குடிகாரராகவும் இருந்த இப்பணித்தள ஊழியருடைய உறவினர் தொடர் ஜெபத்தினால் மனந்திரும்பி ஆராதனையில் கலந்து கொள்கிறார். துதியுங்கள்!

வயிற்று வலியினால் பாதிக்கப்பட்டுள்ள அர்ஜூன்தாஸ், சரீரம் பெலவீனப்பட்டுள்ள லலித்தாதேவி மற்றும் பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள மந்திதேவி, முன்னாதாஸ், லக்கினிதேவி ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

கயா I தீமோ 2:1

இக்கோட்டத்தின் தலைமையிடமான இப்பணித்தளத்தில் ஊழியர் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. தந்துலா, நாலா, வார்க்கட், சிஜுவா கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அசோக்குமார், வினித்குமார், ரவிரஞ்சன்குமார், சுனில்குமார், நல்லாப், அர்விந்த் ஆகியோர் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்டனர். தொடர் காய்ச்சலினால் கஷ்டப்பட்ட புத்திரியா கிராமவாசி மங்க்ராகுடியா என்ற சிறுமி, சர்ஜுயாதவ் இருவருக்கும் ஜெபத்தால் சுகம் கிடைத்தது. உலக முழுவதும் இருந்து புத்தமத பக்தர்கள் வந்துபோகும் புத்தகயா பகுதியில் செய்யப்படும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

டிசம்பர் 16 **சேர்க்கி** சங் 19:7

சோக்டா, கோலாஹரா, வகாஹி, தப்தி, பேலா, பூனேல், மோராயிட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. சத்தியத்தால் விடுதலையாக்கப்பட்ட வினோத்தாஸ், ரஷ்மிதேவி, ரமேஷ்குமார் ஆகியோர் சபைக்கு வருகிறார்கள். சுவிசேஷத்தை விரோதித்து வந்த கமலாபிரசாத் இயேசுவே உண்மையான தேவன் என்று அறிக்கையிட்டு, ஆராதனையில் கலந்து கொள்கிறார். வீட்டைவிட்டு காணாமல்போன பூஜன்குமார் என்ற சகோதரன் வீடு திரும்பவும், மத்திதேவியின் சுகத்திற்காகவும் மற்றும் அன்தர்குமாரி, ரேகாகுமாரி இவர்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

பாராசட்டி ஏசா 59:1

இப்பணித்தள பகுதியில் சுவிசேஷம் அறிவிக்கச் சென்ற இப்பணித்தள ஊழியரை கிராமத்தினர் சுவிசேஷம் அறிவித்தால் நிர்வாணமாக்கி விரட்டுவோம் என்று எச்சரித்தனர். இதற்கு மத்தியில் குமேர், போங்கியா, முசைனி, பர்வத்தியா, நிமியாடான்ட் ஆகிய

கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சிவ்கன்ஜ், ஜாஜ், திவ்னியா, கல்லா போன்ற கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுரேஷ்தாஸ், ராஜேந்தர்யாதவ், பிரதிப்சிங் இவர்கள் விக்கிரக வழிபாடுகளில் இருந்து விலகி இரட்சகர் இயேசுவை விருப்பமாக ஏற்றுக் கொண்டனர். திருமணமாகி 10 வருடங்களாக குழந்தை பாக்கியமில்லாதிருக்கிற சுதாமியதேவி என்ற சகோதரிக்காக ஜெபியுங்கள்.

டிசம்பர் 17 **டோபி** ஏசா 61:1

ஏக்தாரா, லேவுகடா, சுக்கா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ புத்தகங்கள் மற்றும் புதிய ஏற்பாடு விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. கனேஷ்மஹுத்தோ, மோகன், அசோக், தினேஷ் ஆகியோரது வீடுகளில் ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. வியாதியினிமித்தம் மரண படுக்கையில் இருந்த சோட்டுவை தேவன் சுகமாக்கி தனது நாமத்தை மகிமைப்படுத்தினார். இரத்தப்போக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள குனியாவின் சுகத்திற்காகவும், பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள கவரன்மண்டலின் விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

குர்ராரு I சாமு 1:10

மன்ஜர், ரேக்கினியா, மர்வா, பர்வாடி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. அசோக்குமார், உப்பேந்தர் பிரசாத், மனோஜ்குமார், ராமுசௌவுத்ரி ஆகியோரது வீடுகளில் குடும்பக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. திருமணமாகி நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாதிருந்த அம்ரா கிராமத்தைச் சேர்ந்த சங்கீதாவிற்கு ஜெபத்தின் வல்லமையினால் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்பட்டு, ஆண் குழந்தை பிறந்துள்ளது. தோல் வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள சந்திரவதி, தனது கணவரும், மகனும் இறந்ததின் நிமித்தம் சரீர பெலவீனத்தோடு காணப்படுகிற பியாரிதேவியின் ஆறுதலுக்காகவும் மற்றும் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

GEMS POLYTECHNIC COLLEGE &
GEMS ENGLISH MEDIUM SCHOOLS
Ratanpura, Aurangabad, Bihar-824121

Wanted Missionary Teachers

- By God's divine Grace GEMS has initiated the process of establishing a polytechnic college.
- It is aimed to be a center for quality education and a channel for evangelism.
- We are looking for missionaries with commitment to serve the Lord. Vacancies are available for Teaching, Non Teaching and Administrative positions.
- Qualifications for teaching positions are Diploma, Bachelor's or Master's in Engineering Degree and relevant qualifications for Non Teaching and Administrative staff.

Apply with your CV to: gems@gemsbihar.org or polytechnic@gemsbihar.org

Only one life, it will soon be past, only what's done for Christ will last!

டிசம்பர் 18 **சேர்காட்டி** யாக் 5:20

பனாமி, விப்பாகட்டி, யோகபூர், டோபி, பாங்கேபஜார், பாராசட்டி, சேர்க்கி, குடாசின் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து, சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. A.P காலனி என்ற இடத்தில் 3 நாட்கள் கன்வென்ஷன் நடத்தப்பட்டது. இக்கோட்டத்தின் அனைத்து பணித்தள சபை விசுவாசிகளும் கலந்து கொண்டனர். கிறிஸ்துவை விரோதித்து வரும் பிகுசாஹு என்பவரின் தயார், முன்ஸிடோலாவைச் சேர்ந்த சந்தன்குமார் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். பின்மாற்றத்தில் இருக்கும் முராரிதாஸ் என்பவருக்காகவும், பால்சனத்யாதவ், கிருஷ்ணாதேவி ஆகியோருக்கு ஆராதனையில் கலந்து கொள்ளக் கூடாதபடி காணப்படும் தடைகள் மாற ஜெபியுங்கள்.

DCC ஊழியங்கள் (Day Care Centre)

டிசம்பர் 19 **டெஹ்ரி-ஆன்-சோன்** சங் 107:20

சியாராம்பூர், மக்தம்பூர், உக்ரா, ஜினோரியா, மெஹந்தியா, தம்மௌல், சாந்திபுரம், எக்கங்கர்சராய் ஆகிய இடங்களில் தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்டவர்களுக்கு வியாதிக்காக ஜெபிக்கப்பட்டது. இப்பணித்தள பள்ளியில் தேர்வு எழுதிய மாணவர்கள் அனைவரும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். T.B வியாதியால் பாதிக்கப்பட்டுள்ள நைனா என்ற சிறுமியின் சுகத்திற்காகவும், இப்பள்ளியில் படிக்கும் ஊனமுற்ற பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

புல்வரியா, கமிதௌரா, டும்மரியா, கர்மாகி, முஜான் ஆகிய இடங்களில் உள்ள பகல் பாதுகாப்பு பள்ளிகளில் அரையாண்டு பரீட்சைகள் நடைபெற்றது. புல்வரியா மற்றும் பிஹரா கிராமங்களில் பிள்ளைகளின் சேர்க்கை அதிகரித்துள்ளது. பிஹாரா, படௌசா மற்றும் சௌசா பள்ளிகளில் பிள்ளைகளின் எண்ணிக்கை பெருகவும், gems DCC பள்ளிகள் அரசாங்க அங்கீகாரம் பெறவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 20 **திலௌவுத்து** அப்போ 2:47

வைசாலி, ஹரிகர்பூர், தர்மிகா, பலோன், மஹேந்தர்பூர், தும்பா, பன்சாரி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் மேற்பார்வையிடப்பட்டது. இப்பகுதிகளில் உள்ள சில விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. ஜாஷேதேவி, சாந்தி தேவி உட்பட 7 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக உள்ளனர். அனைத்து பள்ளியின் ஆசிரியர்களுக்காகவும், தலைமை ஆசிரியர்களுக்காகவும் மற்றும் மாணவ - மாணவியர் களின் சுகநல பெலனுக்காகவும் ஜெபியுங்கள்.

B.M.P காலனி சங் 41:3

ஜெனோரியா, மோஹந்தியா, சியாராம்பூர், டக்கர்ஸ், எக்கங்கர்சராய், மக்தம்பூர், தம்மௌல், ஆசாத்நகர் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் visit செய்யப்பட்டது. சத்தியேந்தர் பிரசாத் என்பவரின் மகனின் சுகத்திற்காகவும், அரவிந் என்வருடைய மனைவியின் சுகத்திற்காகவும், மெஹந்தியா பள்ளியின் ஆசிரியை உஷாகுமாரியின் சுகத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய ஊழிய பிரயாணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 21 **பெலாவன்** II கொரி 3:17

டிமியா, கங்காபுரா போன்ற கிராமங்களில் செய்யப்பட்ட தனிநபர் ஊழியத்தின் வாயிலாக அநேகர் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். நந்தினிகுமாரி என்ற சகோதரி அசுத்தாவியின் கிரியையிலிருந்து தேவனுடைய கிருபையால் விடுதலையானார். அடிதடி காரியங்களில் ஈடுபட்டுவந்த மனிஷ் என்பவருக்கு இயேசுவை பற்றி சொன்னபோது மனம்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டார். இப்பள்ளியின் முன்பாக செயல்பட்டுவரும் சாராயக் கடை அகற்றப்பட ஜெபியுங்கள்.

நிம்மியாடி ஏசா 43:21

இப்பணித்தள பள்ளியில் ஞாயிறு ஆராதனை தடையில்லாமல் நடத்தப்பட்டு வருகிறது. ராஜ் ராம்டிஹரா கிராமத்தில் 3 நாட்கள் சுவிசேஷக் கூட்டம் நடத்தப்பட்டது. இப்பகுதியில் படக்காட்சி வாயிலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு ஆவிக்குரிய சிறப்புக் கூட்டத்தை சிறுவர் துறை ஊழியர்கள் செய்து வருகிறார்கள். இத்துறை ஊழிய ஒருங்கிணைப்பாளர், மேலாளர்கள், ஆய்வாளர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 22 **சட்னிபீஹா** சங் 96:1

இப்பணித்தளப் பகுதியில் மாலைதோறும் சுவிசேஷ நற்செய்தி கிராமங்களில் அறிவிக்கப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர் கூடுகையில் பாடல் மற்றும் வசனம் தியானிக்கப்பட்டு வருகிறது. வியாதிப்பட்டிருந்த ஹிராலால் என்பவருக்கு விசுவாசத்தோடு ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அடிக்கடி வியாதிப்படுகிற கைமுர் மலைவாழ் மக்களுக்களின் சுகத்திற்காகவும், லௌட்டோர் இனமக்களின் மனமாற்றத்திற்காகவும் ஜெபியுங்கள்.

பட்டம்டா ஏசா 53:5

தனிநபர் ஊழியத்தின் வாயிலாக 10 வாலிபர் மத்தியில் ஊழியம் மேற்கொள்ளப்பட்டது. கேரூவா என்ற கிராமத்தில் பாடல்கள் பாடி அறிவிக்கப்பட்டு சுவிசேஷத்தை மக்கள் ஆர்வமுடன் கேட்டனர். ஆசிரியர்களுக்காக ஜெபக்கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்களின் பெற்றோர்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வியாதிப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஜெபத்தின் மூலம் சுகம் கிடைத்தது. இப்பணிததள ஊழியருடைய மகன் ராகுல்குமாரின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.

போஜ்புரி III கோட்டம்

டிசம்பர் 23 **பட்னா** சங் 3:8

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. இப்பட்டணத்தில் உள்ள கன்ஹௌலி பஜார் பகுதியில் 3-நாள் நற்செய்தி கூட்டம் நடத்த தேவன் உதவி செய்தார். அப்பகுதியில் பலத்த கிரியை நடப்பித்தார். சிலர் திருமுழுக்கு பெற ஆயத்தமாக உள்ளனர். பட்னா சபை கட்டுமான பணி நடந்து வருகிறது. மேலும் சபை ஊழியம், ஞாயிறு வகுப்புகள், தையல் பயிற்சிபள்ளி போன்றவை நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. கைப்பிரதிகள் கொடுத்து ஜனங்களை உற்சாகப்படுத்தும் பணியும் சிறப்பாக நடத்தப்பட்டது. சபையின் கட்டுமானபணி, வாலிபர்ஊழியம், வீடு சந்திப்பு ஊழியம் போன்றவை சிறப்பாக நடைபெற்று வருகிறது. மீனாட்சிதேவி, தர்மான் இவர்கள் புதிய நபர்களாக வருகை தந்தனர். நமது சபை விசுவாசி ஆலன் என்பவருக்கு தேவன் ஒரு ஆண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். மனோஜ், சுஜித், ஜீலி, மம்தா, அன்டிரிப், இவர்களின் திருமண தடைகள் நீங்க, பிண்டு, ரேணு இவர்களின் குடும்ப வாழ்க்கையில் இருக்கும் குடும்ப பிரச்சனைகள் மாற, ஏஞ்சல் என்ற பிள்ளைக்கு இஞ்சினியரிங் காலேஜ்ஜில் படிக்க இடம் கிடைக்க ஜெபியுங்கள்.

டிசம்பர் 24 **முஸாப்பர்பூர்** மத் 19:26

சகரா, கங்காபூர், ஹர்ஹர்பூர், ரெய்னிமோட், இட்டஹா, பூசா, ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். புதிதாக சக்பகாட், இட்டஹா, ஹர்ஹர்பூர், கங்காபூர், பகுதிகளில் ஆராதனை நடத்த வாசல் திறக்கப்பபட்டுள்ளது. ரேகா தேவி, என்பவர்கள் உடல்நிலை சரியில்லாமல் விக்கிர ஆராதனை வழிபாட்டில் இருந்த சம்பு என்பவரை கர்த்தர் சந்தித்தார். செல்வி என்பவர்களுக்கு கண்களில் இருந்த வலி ஜெபத்தின் உதவியினால் சுகம் கிடைத்தது, இந்திரா தேவி என்பவர்களுக்கு முகத்தில் இருந்த வீக்கம் அவர்கள் விசுவாசத்தின்படி தேவன் சுகம் கொடுத்தார். டோலிபஜார்,

வைசாலி, சமஸ்திபூர், முசபர்பூர், கங்காபூர், சக்பஹாட் போன்ற கிராமங்களில் செய்யப்பட இருக்கிற தொடர் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

டிசம்பர் 25 **பட்டம்தா** மத் 9:13

இப்பணித்தள சபை வாயிலாக சபை ஆராதனை, பெண்கள் கூட்டம், ஞாயிறு வகுப்புகள், வீட்டுசபை ஆராதனை, உபவாச ஜெபம், விஷேசமாக சுகமளிக்கும் ஜெபம் போன்றவை நடத்தப்பட்டு வருகிறது. 7-கிராமங்களில் வீட்டுசபை ஆராதனை தடையில்லாமல் நடத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணாதேவி, சோனிகுமாரி, ராகுல்யாதவ் இவர்கள் ஆண்டவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டுள்ளனர். சபைகட்டிட வேலையில் காணப்படும் தடைகள் நீங்கவும், சாத்தான் தொல்லையினால் பாதிக்கப்பட்டுள்ள திரௌபதிதேவி என்பவரின் விடுதலைக்காகவும் மற்றும் திருமுழுக்கு பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 26 **சக்சோஹரா** லூக் 15:7

நௌரங்கா, தாஜினிபூர், சக்ஸோஹரா, மஹமுதா, ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுவிசேஷத்திற்காக முதன் முதலாக வழி திறக்கப்பட்ட கோடியாரி, ரஸல்பூர், கைமா, தாஜினிபூர், நௌரங்கா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு, நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஜீகேவந்த், நிவாஸ்குமார், திருமுழுக்கு பெற ஆயத்தமானார்கள். சைரியா, நகுசக், சக்ஸோஹரா பாஸ்வான்டோலா, சக்ஸோஹராதாஸ்டோலா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. நவ்வல்சிங், பனாரஸ்பாஸ்வான், லலன்குமார், சர்மோதரன் சபைக்கு புதிய வரவுகள். இப்பகுதியில் காணப்படும் சமுதாய கட்டுகள் அழிக்கபடவும், ஜனங்கள் பாவபழக்கத்தில் இருந்து விடுதலைபெறவும் மற்றும் பின்மாற்றத்தில் இருக்கிற விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 27 **மொக்கம்மா** ஆதி 28:14

சத்வாடா, சைன்பூர், காதிர்பூர், மதௌல், அம்பேத்கர் நகர் ஆகிய இடங்களில் சென்று புதியஏற்பாடு, சுவிசேஷக் கைபிரதிகள் விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது.. சிறுபிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. விசுவாசிகளின் மத்தியில் குடும்பக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. பத்வான்ஸ், பிரேம்ராஜ், கோரிகாமா, தத்வாடா, ஆகிய கிராமங்களில் வீட்டு சபை கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. 12 வயது சிறுவன் பிறந்தது முதல் வயிற்றில் பிரச்சனையோடு இருந்தவன் ஜெபத்தின் பலனால் சுகமானான். சுசிலா, கிரண்தேவி, சரிதாதேவி ஆகியோர் சபைக்கு புதிய வரவுகள். மஹுவா பணிதளத்தின் சபை கட்டிடத்திற்காக நிலம் ரெஜிஸ்டேஷன் வேலை விரைவில் முடியவும், கட்டிடம் விரைவில் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 28 **மஹூவா** உபா 7:15

சம்பாநகர், ஸாஹேப்கஞ்ஜ், பாகல்பூர், ஜார்ஹி, காய்சௌவுக், ஜிரோமாயில்சௌக், ராணிதலாவ், சம்பாநகர், ஜவாரிபூர் ஆகிய கிராமங்களுக்கு சென்று சுவிசேஷக் கைப்பிரதிகள், மற்றும் புதியஏற்பாடு கொடுத்து சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. நீண்ட நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த உஷா தேவி விசுவாசத்தோடு சபை ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்து சுகத்தைப் பெற்றுக் கொண்டார். மனநிலையில் பாதிக்கபட்டிருந்த சோனி குமாரி என்ற சகோதரியும் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார். ரவிந்தர்குமார், சாந்திகுமாரி, வந்தனாதேவி, இவர்கள் குடும்பம் ஒழுங்காக சபைக்கு வரவும், ஊழிய எதிர்ப்புகள் மாறவும் ஜெபியுங்கள்.

நபுத்பூர் யாத் 33:22

பரித்பூர், ஜங்கஹிரா ஆகிய கிராமங்களில் சுமார் 500-பேருக்கு கைபிரதிகள் கொடுத்து சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சபையில் வசனத்தைக் கேட்டுவந்த புதிய விசுவாசிகள் மரியம், அர்சல், சகோமி, சுரேஷ் குமார், சாலோமி இவர்கள்

திருமுழுக்கு பெற ஆயத்தமானார்கள். ஞாயிறு பள்ளியில் அதிக பிள்ளைகள் கலந்து கொள்கின்றனர். சந்திரமோகன்பிரசாத், சட்டு என்பவர்கள் சாத்தான் பிரச்சனையிலிருந்து விடுதலையாகவும், சோபா என்பவர் Blood கேன்ஸர் வியாதியிலிருந்து சுகமாகவும் மற்றும் இப்பணித்தள சபைக்காக நிலம் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 29 **தனியாவா** சங் 27:5

போகிப்பூர், மதுரியாவான், சீவ்சக், முண்டா, நர்மா, மஹதிபூர், ஸிகரியாவான், படி-கேவாயி, சோட்டிகேவாயி, நுரிசௌவுக், சஹோஜோப்பூர், ஹேரஹிபிகஹா, ஜீவன்சக், முக்கார்கா்பூர், டண்டா, நபி ஆகிய கிராமங்களில் கைப்பிரதிகள் கொடுத்து சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. உடல் நிலை சரியில்லாமல் இருந்த போகிப்பூர் கிராமத்தைச் சேர்ந்த சசிகாந்த் பஸ்வான், காஜல்குமாரி, பூதான்குமார் மனைவி மற்றும் படிகேவாயா கிராமத்தைச் சேர்ந்த சயாம்பலி ஜெபத்தின் வாயிலாக சுகமானார்கள். பயத்தின் ஆவியினால் பாதிக்கப்பட்டுள்ள பாலிக்கா, நௌவாலாகுமார் குடும்பத்தின் சமாதானத்திற்காகவும் மற்றும் சசிகாந்த்பாஸ்வான், ராகேஷ்குமார், தினேஷ்குமார் ஆகியோரின் படிப்புக்காகவும் ஜெபியுங்கள்.

லால்கஞ் சங் 115:14

இப்ராஹிம்பூர், தாவூத்நகர், ஜங்கலிடோலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பக்கடிகட், அகர்பூர், இப்ராஹிம்பூர், இஸோபூர், ரோஹீவா, ரிக்கர், ஆகிய கிராமங்களில் புதியஏற்பாடு விநியோகித்து பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கடும் எதிர்ப்பின் மத்தியில் இப்ராஹிம்பூர், ரிக்கர், ரஹீவா, இஸோபூர், ஆகிய கிராமங்களில் ஜெபக்கூடுகைகள் நடத்தப்பட்டு வருகிறது. திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற ஜித்தேந்தர், ரிதேஷ், ராஜ்குமார், ஸிமாகுமாரி ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

டிசம்பர் 30 **கோவிந்த்பூர்** சங் 128:2

ஹர்பூர், பேல்வா, ஜஹாங்கீர்பூர், சலக்னி ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது, விசுவாசிகளின் குடும்பங்களில் நடத்தப்படுகிற ஜெபக்கூடுகைகளில் 40- பேர் வருகை தருகின்றனர். ஜஹாங்கீர்பூர் கிராமத்தில் ஹரேந்திரபஸ்வான் என்பவர் சாத்தான் பிரச்சனையினால் இருந்தார். அத்தோடு குடிப்பழக்கத்திலும் ஈடுபட்டிருந்தார். ஜெபத்தினால் ஜெயம் பெற்று விடுதலையானார். தனிப்பட்ட விதத்தில் பாதிக்கப்பட்டுள்ள தேவேந்திர பாஸ்வான், தினநாத்ராம் என்பவரின் மனைவி மற்றும் சக்ஜாஹித் கிராமத்தில் விசுவாசிகளின் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஹஜிப்பூர் ஏசா 30:15

கன்ஹௌலி பகுதியில் நடத்தப்பட்ட நற்செய்தி கூட்டத்தின் வாயிலாக சுவிசேஷ நற்செய்தி சுமார் 200 பேருக்கு சென்றடைந்தது. சபையில் இரவு ஜெபம், உபவாசக் கூட்டம் மற்றும் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. சபையில் திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருந்த சகோதரர் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார். புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மந்தி தேவி என்பவரின் சுகத்திற்காகவும், இப்பணித்தள ஊழியரு டைய பிள்ளைகள் நியூட்டன், குளோரி, பிரீத்தி இவர்களின் படிப்புக்காகவும் ஜெபியுங்கள்.

டிசம்பர் 31 **வைஷாலி** எரே 45:5

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு, ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடு வழங்கப்பட்டது. இப்பணித்தள ஊழியருக்கு ஏற்பட்ட சிறு விபத்தின் நிமித்தம் ஊழியம் தடைபட்டது. ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த சகோதரர்களுக்குள் தேவன் மாற்றத்தைக் கொடுத்து வருகிறார். புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட ஜெபியுங்கள்.

மனேர் ஏசா 43:25

சிறுபிள்ளைகள் மத்தியிலும் ஊழியம் செய்யப்பட்டது. சபையில் வசனத்தைக் கேட்டுவந்த சோனுகுமார், சங்கீதாகுமாரி, பூஜாகுமாரி, கீதாதேவி, மனுகுமார், ஆகியோர்

திருமுழுக்கு பெற்றுக் கொண்டனர். சபைக்கு புதிய நபர்கள் 5 பேர் வருகின்றனர். மனோஜ் என்பவருக்கு சாத்தான் தொல்லையிலிருந்து விடுதலை கிடைத்தது. பூஜாகுமாரி என்ற சகோதரிக்கு வயிற்று வலியிலிருந்தும், சுனைனாவர்மா என்பவருக்கு கைவலியிலிருந்து சுகம் கிடைத்தது . 19 பஞ்சாயத்துகளில் உள்ள எல்லா கிராமங்களில் வீட்டு சபை ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

ஜனவரி 01 **மான்பூர்** ஏசா 49:23

சுஹயி, ஜத்கைலி, தரம்பூர், டிக்கஹா, ராஹிம்பூர், ஸரையாகோட்டி, சக்அஹலாத், வைசாலி, சிசிரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள், புதிய ஏற்பாடு விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக விரேந்திரகுமார் பகத், சுரேஷ்குமார் சௌதிரி, விஜய்ராம், பிரமோத்குமார், அனில்டாக்கூர் ஆகியோர் சந்திக்கப்பட்டனர். இப்பணித்தள ஊழியருக்கு ஏற்பட்ட விபத்திலிருந்து தேவன் அவரையும், அவரது பிள்ளைகளையும் பாதுகாத்தார். நிமோனியா வியாதியி னால் பாதிக்கப்பட்டிருந்த 7 வயது நேகாகுமாரிக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். ராமாகாந்த்சிங், சஞ்சுதேவி இவர்களுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் கொடுத்து ஆசீர்வதித்தார். பவன் பாஸ்வான், அனிதாதேவியின் கணவர் இருவரும் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.

கொரௌவுல் எசே 33:5

மோகன்பூர், சைன்பூர், மதனா, ஹர்சேர், பகதுர்பூர், சஹேராகுர்த் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. சபையில் வாலிபர்களுக்கு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. பத்தனா, கொரௌல் சக்தயாஸ் பகுதிகளில் வீட்டு சபை கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஆனந்த், அக்கிலேஷ்குமாருக்கு காணப்பட்ட உடல் வீக்கம் ஜெபத்தின் வல்லமையினால் சுகமானது. சஞ்சய்குமார், சந்தாதேவி, விஜய்குமார் ஆகியோரது வாழ்க்கையில் தேவன் அற்புதம் செய்ய ஜெபியுங்கள்.

ஜனவரி 02 **பக்தியார்பூர்** ஏசா 31:5

ராம்நகர், ராஜ்பூர்டோலா, பாஸ்வான்டோலி, ஆகிய கிராமங்களில் அன்பரின் நற்செய்தி அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. ஜித்தேந்தர் சிங், ரூபிதேவி இவர்கள் புதிய தொடர்புகள். சோனிதேவி, ரீத்தாதேவி, வினித்தாதேவி, லாலதிதேவி, பூல்வந்திதேவி, மீனாதேவி, விஜயந்திதேவி, இவர்கள் திருமுழுக்கு பெற ஆயத்தமாக உள்ளனர். நீண்ட நாட்களாக உடல் நிலை சரியில்லாத லகனிதேவியின் கணவர் ஜெபத்தால் சுகமானார். சோனிதேவி, ரூபிதேவி, பாஜந்திதேவி ஆகியோருடைய வாழ்க்கையில் கர்த்தருடைய மகிமை வெளிப்படவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செர்பூர் நீதி: 11:18

பாங், சீர்பூர், உட்பட சிலபகுதிகளில் சென்று நற்செய்தி அறிவித்து, புதிய ஏற்பாடு மற்றும் சுவிசேஷக் கைபிரதிகளும் விநியோகிக்கப்பட்டது. சில வாலிபர்கள் சபைக்கு புதிதாக வருகின்றனர். மத்தலிதேவி என்பவருக்கு கிடைக்க வேண்டிய பணம் கிடைக்க தேவன் கிருபை செய்தார். சுனித்தா, வேதாமோதேவி, பிரதிமாதேவி, அருண் ஆகியோருக்கு சரீர பெலவீனத்திலிருந்து ஜெபத்தின் பலனால் தேவன் சுகத்தைக் கொடுத்தார். காந்திதேவி, சைலிதேவி, பூல்வந்தி தேவி, பிரபாதேவி, ஆஷாதேவி, ராஷே், இவர்களின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், சிவபஜன், ராமுசௌதிரி, சுபாஷ் இவர்கள் போதை பழக்கத்தில் இருந்து விடுதலை பெறவும் மற்றும் குடியா என்ற வாலிப பிள்ளையின் திருமணத்திற்காகவும் ஜெபியுங்கள்.

குஸ்ருபூர் யோவேல்: 3:10

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 5 கிராமங்களில் சுமார் 210 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு, புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. பைகண்ட்பூர் கிராமத்தில் ஜெபக்கூட்டம் ஆரம்பித்துள்ளோம். சோஜித்குமார் என்பவருக்கு காசநோயிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். கீதா, மற்றும் சேகர், சுதாமா, சோனுக்குமார் ஆகியோருக்கு

உடல் பலகீனத்திலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். இப்பகுதியில் விசுவாசிகளுக்குக் காணப்படும் எதிர்ப்புகள் மாற ஜெபியுங்கள்.

PEACE - II கோட்டம்

ஜனவரி 03 **பிஹாரா** ரூத்:2:12

கஞ்சன்பூர். உமரி, ஆனந்த்பூர், பிஹதா ராஜ்பூர், ஆகிய கிராமங்களை சேர்ந்த விசுவாசிகளும் கலந்து கொண்டனர். ராம்னுஜ் பாஸ்வான், லால்பாஸ்வான், ஊர்மிளா தேவி, பூனம் குமாரி, அசோக் குமார், சைலேந்திர பாஸ்வான், சோனு பாஸ்வான், பைஜ்நாத் சாஹ், கஞ்சன் தேவி, பிரபாத் குமார், ஆகியோரின் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்துள்ளார். மகேந்திர ஷாஹ் என்பவர் குடிபழக்கத்திலிருந்து விடுதலையானார். இந்து தேவிக்கு குழந்தை பாக்கியம் உண்டாகவும், நிலப்பிரச்சினையில் நியாயமாக போராடும் ராம்லால் பாஸ்வான் என்பவரின் வெற்றிக்காகவும் மற்றும் பேஜ்நாத் ஷாக், கஞ்சன் தேவி, தனஞ்செய் ஷாக், ரஜ்ஜித் குமார், அகிலேஷ் குமார். ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிக்கவும்.

லௌஹார்பர்னா ஏரேமி:32:19

ஸ்ரீநகர், படுக்கா லௌகர், சொடுகா லௌகர், பலுவா, சோபி, டுமரா, ஆகிய கிராமங்களில் சுமார் 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, புதிய ஏற்பாடு மற்றும் ஆஷாகி புஸ்தக் விநியோகிக்கப்பட்டது. ரவன்காவ் என்ற புதிய கிராமத்தில் ரமேஷ்ராம் ஆர்வமாக சுவிசேஷத்தை கேட்டு வருகிறார். கஞ்சன் குமார் சவித்திரி குமாரி இருவரும் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தால் விடுதலையானார்கள். இப்பகுதியில் உள்ள உயர் ஜாதியினர் இரட்சிக்கப்படவும், தேவா ஜாரி என்பவரது உதட்டில் காணப்படும் வெள்ளைதழும்பு சுகமாகவும், ரிங்கிதேவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 04 **பெல்பனியா** யாத்தி:23:26

சலேம்பூர் கிராமத்தில் கோபால்ஷா என்பவர் மனநலம் குன்றிய நிலையில் பேச முடியாமல் கஷ்டப்பட்டார். மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில் மூன்று வாரம் தொடர்ந்து ஆலயத்திற்கு வந்து ஜெபித்ததின் நிமித்தம் தேவன் இவருக்கு சுகத்தை கொடுத்தபடியால் அந்த கிராம மக்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்துள்ளனர். சபைக்கு புதிதாக வந்து கொண்டிருந்த விசுவாசிகளில் 2 பேர் திருமுழுக்கு பெற்றுள்ளனர். 6 மாதங்களாக கால் வலியால் கஷ்டப்பட்டு வந்த வினோத் சிங் என்பவருக்கு ஜெபத்தினால் சுகம் கிடைத்துள்ளது. திருமணமாகி அநேக வருடங்களாக குழந்தையில்லாமல் இருக்கும் கிரிஜாதேவி, பூனிதேவி ஆகியோரின் குழந்தை பாக்கியத்திற்காகவும், ஊர்மிளா, மஞ்சு ஆகியோருக்கு தோலில் காணப்படும் வெள்ளை தழும்பு சுகமாகவும், லட்சுனுடோலா, தாமோத்பூர், ஜவுலியா, நவுரங்கா போன்ற கிராமங்களில் காணப்படும் ஊழிய விரோதங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 05 **கட்ஹனி** சங்:122:7

பலிகாவ், பங்காவா, மகதின்டோலா, மோர்சியா, சோனாடோலா, ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் வீடுகள் சந்திப்பு ஊழியம் செய்யப்பட்டது. ஷகங்கி, மேம்ராவ், சிவ்பூர், ஆகிய கிராமங்களில் முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் நிமித்தம் 90பேர் சந்திக்கப்பட்டனர். மோர்ஷியா கிராமத்தை சேர்ந்த பிரியங்கா குமாரிக்கு இடுப்பு வலியிலிருந்து தேவன் சுகத்தை கொடுத்தார். புத்ராம்சிங் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், லகுவானி கிராமத்தை சேர்ந்த தன்செய் குப்தாவின் சரீர சுகத்திற்காகவும், பிசாசு பிடியினால் விடுதலையின்றி தவிக்கும் வினக்டோஷ் என்பவரின் விடுதலைக்காகவும், மற்றும் இப்பணித்தள ஊழியரின் மகள் ஜின்ஸி குமாரியின் ஒற்றை தலைவலி குணமாகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 06 **கோயில்வார்** மத்தே:10:8

இப்பகுதியில் 600 பேருக்கு உருது புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. காஜிசக், நயாஹரிபூர், பகூகி, பலா, பாபுகஞ், ஜமால்பூர், சிரிபால்பூர், சிசத்புரா, டுமரியா, மப்மப், கேசர்டீமா, ஆகிய கிராமங்களில் 40 பேருக்கு தனிநபர் ஊழியம் செய்யப்பட்டது. சிரிபால்பூர் என்ற இடத்தில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக உள்ள 10 பேருக்காகவும், மனநிலை பாதிக்கப்பட்டுள்ள பத்தாளி என்பவரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

உட்வான்ட்நகர் ஆதி:22:17

பிகனியா கிராமத்தில் சஞ்செய் பிரசாத் என்பவரின் வீட்டில் வாரத்திற்கு ஒரு முறை பெண்கள் கூட்டம் நடத்தப்படுகிறது. அரிஜன் டோலாவில் சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பியாரா, சிரிராய்பூர், ஜெய்நகர், ரக்ரோனி, சர்துவா, ஆகிய கிராமங்களில் 80 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. உத்வேத் நகரில் சுவிசேஷம் கேட்ட 150 பேர்களுக்காக தேவனை துதியுங்கள். கசல் கிராமத்தில் ராம்லாய்க் என்பவரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

ஜனவரி 07 **சன்தேஷ்** ஏசா:58:8

11கிராமங்களில் 250 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் கொடுத்து சுவிஷேச நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சேலா, கோரி, புளாடி, மனியாக், கான்கர்பூர் ஆகிய 5 இடங்களில் வீட்டுசபை ஆராதனை ஆசீர்வாதமாக நடத்தப்பட்டு வருகிறது. ஜிதன்தேவி, மீனாதேவி ஆகிய இருவர் ஞானஸ்நானத்திற்கு தயாராக உள்ளனர். விரோதிகளால் தாக்கப்பட்டு காது, மூக்கு, வாய் ஆகியவற்றிலிருந்து இரத்தம் வந்து சாகும்நிலையில் மருத்துவரால் கைவிடப்பட்ட நாக்தேவ்ராம் என்பவர் ஜெபத்தால் பிழைத்துக் கொண்டார். குஷ்டரோக வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள 12 வயதான அவ்தேஷ் குமாரின் சுகத்திற்காகவும், அரசு பணிநீக்கம் செய்யப்பட்டு பல வருடங்களாகியும் இழப்பீட்டு தொகை கிடைக்காத ஹரிநந்தன்ராம் என்பவருக்காகவும் பிசாசு பிடியிலிருந்து சங்கீதாதேவி விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 08 **பிஹியா** லூக்க:10:19

படுஹர்வா டோலா, சக்ரதாக், சக்வா, குபர்தாக், கல்யாண்பூர், அம்ரசி நவதா, தேகரா, பிகியா காவ், ஓசாயி, பபொளி, தவாவ், பஸ்வரியா, கதரா காவ், ஷமர்தாக் ஆகிய 14 கிராமங்களில் சுமார் 400 பேருக்கு மேல் சுவிசேஷத்தைக் கேட்டனர். 40 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. திருமுழுக்கிற்கு தயாராக உள்ளனர். தவாவ், ஓசாயி, கல்யாண்பூர், குப்ரதாக், ஆகிய 4 இடங்களில் வீட்டுசபைக் கூட்டம் நடைபெறு கிறது. பிசாசின் பிடியில் இருந்துவந்த லீலாவதி இயேசுவின் நாமத்தினால் விடுதலையா னார். கால் வலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த டாக்டர். சன்னஞ் குமார் என்பவருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் கொடுத்த சுகத்தினிமித்தம் 5 பேர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். மோதி ஜாரோ என்பவருக்கு கிட்னியில் உள்ள பிரச்சனை சுகமாகவும், ஜரிதா தேவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 09 **பெக்ராம்** ஏசா:49:23

நஹகர், அகியாபூர், பிவாபூர், பாபன்லயி, பிக்ரம், கர்ஷா, பாதாகோள், சொகிபூர் ஆகிய 8 இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுமார் 150 பேர் கர்த்தரின் வசனத்திற்கு செவி கொடுத்தார்கள். நேஹாகுமாரி, சோனிகுமாரி மற்றும் அபிஷேக் ஆகியோர் புதிதாக ஆலயத்திற்கு வருகின்றனர். சிவ்பூர் என்ற இடத்தில் நடைபெறும் கூடுகைக்கு 25 பேர் வருகை தருகின்றனர். பிராமண வகுப்பைச் சேர்ந்த கோபால் சர்மா இவரது மனைவி பூனம் தேவி விசுவாசத்துக்குள் வந்துள்ளனர். இப்பணித்தள ஊழியருக்கு ஏற்பட்ட விபத்திலிருந்து அவருக்கு எந்தவித சேதமுமின்றி தேவன் அற்புதமாக பாதுகாத்தார். நேகா குமாரி, சோனி குமாரி, அசோக் சிங் ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட ஜெபியுங்கள்.

ஜனவரி 10 **சப்ரா** சங்: 77:14

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. இப்பணித்தள சபையின் விசுவாசிகளுக்கு 2 நாட்களாக நடத்தப்பட்ட retreatல் 70 பேர் கலந்துகொண்டனர். பிகியா கிராமத்தில் நடந்த ஜெபக்கூட்டத்தில் சேட் குடும்பத்தை சேர்ந்த ஒருவருக்கு வியாதியிலிருந்து தேவன் சுகத்தைக் கொடுத்தார். ஹரேராம், ரிந்தாதேவி இருவரும் பிசாசு பிடியிலிருந்து இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தினால் விடுதலையானார்கள். இக்கோட்டத்தில் உள்ள அனைத்து விசுவாசிளுக்காக நடத்தப்பட்ட கன்வென்ஷனில் 1000 பேர் விசுவாசிகள் கலந்து கொண்டனர். சப்ராவில் புதிய பணித்தள ஊழியம் தொடங்கப்பட்டுள்ளது. சில பிரச்சனைகளால் தடைபட்டிருந்த ஜெகதீஸ்பூர் சபை கட்டிட வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 2012-ல் நடத்தப்பட உள்ள பெரிய சுவிசேஷக் கூட்டத்திற்காக ஜெபியுங்கள்.

ஜனவரி 11 **ஆரா** மீகா:2:!3

பெலாயீம், மீராசௌவுக், கபீர்கஞ், சவுக்கிபூர், நவாதா, சீத்தல்டோலா, மோத்திடோலா, விஷ்னுநகர், சிரிடோலா ஆகிய 9 இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பெலாயீம், மீராசவுக், சீத்தல்டோலா, இந்த இடங்களில் Prayer Cell நடத்தப்பட்டு வருகிறது. பின்மாற்றத்தில் இருந்த பரமாத்துமா மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ளுகிறார். மாலைக்கண் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த 8வயது சிறுமி ரேணு விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானாள். சங்கீதாவிற்கு காணப்படும் திருமணத் தடைகள் நீங்கவும், கீழே விழுந்து முதுகில் காயம் ஏற்பட்டுள்ள ராமோதர் என்ற சகோதரனின் சுகத்திற்காகவும் மற்றும் நீண்ட நாட்களாய் சத்துருவின் போராட்டத்தோடு புல்காரி என்ற சகோதரியின் குடும்ப சமாதானத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 12 Gundhi 1 பேது: 2:!4

கிரிஸனா கட், ஷின்ஹா, பரசுராம் பூர், குதரியா, ஜேகஹரி, சோன்வர்ஷா, பிபரா, காம்மாநகர், கர்கரா, நருவா ஆகிய கிராமங்களில் 150பேருக்கு சுவிசேஷ புத்தகங்கள் விநியோகித்து சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஜெபக்கூட்டம் நடத்தப்படுகிற 10 இடங்களில் உபவாசக் கூட்டம் நடத்தப்பட்டது. பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலமாக விடுதலையான 17 வயதான சந்தா குமாரியின் வீட்டார் ஜெபத்திற்காக தங்கள் வீட்டை திறந்து கொடுத்துள்ளனர். 45 வயதான ஓம்பிரகாஷ் என்பவருக்கு சரீரத்தில் காணப்படும் வெண்குஷ்டம் சுகமாகவும், இப்பகுதியில் குடிநீர் வாயிலாக பரவிவரும் வியாதி நீங்கவும் ஜெபியுங்கள்.

நர்ஹிசண்டி ஏசா: 41:10

Narhi, Chandi, Narbirpur, Bahiyara, Faranghpur, Akugoun, Pratap pur, Kosihan, khanghow, Rupchakiya, Bhairotola, Sakkadi, Koilwar, Bihta ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. Bihtaவில் 6 விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றார்கள். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வீட்டு பொருட்களை அழித்து, வீட்டிற்கும் வராமல் இருந்த சின்தா தேவியின் கணவருக்காக ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு விடுதலையைக் கொடுத்தார். சுனில் குடும்பம் இரட்சிக்கப்படவும், பின்மாற்றத்திலிருக்கும் விசுவாசிகளுக்காகவும் மற்றும் பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள ஆர்த்தி குமாரிக்காகவும், அனித்தா தேவியின் கணவருக்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 13 **பஸந்த்பூர்** ஏசா: 54:17

சோக்கா, கன்ஹெலி, கரகிகுருத் ஆகிய கிராமங்களில் புதிதாக ஊழியம் தொடங்கப்பட்டுள்ளது. ரீத்தாதேவி, சம்புகுமார் சுவிசேஷம் கேட்க ஆர்வம்

காட்டி வருகின்றனர். சிரியா, மல்மலியா, ரத்தன்படொளி, முஸகர்டோலா, ஆகிய இடங்களில் 50புதியஏற்பாடுகள் கொடுக்கப்பட்டது, வயிற்று வலியினால் அவதிபட்டு வந்த ஊர்மிளாதேவி விசுவாசத்தோடு ஜெபத்திற்கு வந்ததினிமித்தம் தேவன் சுகத்தைக் கொடுத்தார். ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மதவாத இயக்கங்களை சேர்ந்தவர்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள்.

ஜகதீஸ்பூர் சங்:90:14

தேவ்கட், நாராயன்பூர், டிக்கிலி, ஜெகதீஸ்பூர், ஆகிய இடங்களில் 100பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுரேஷ், அனு, ரவிந்தர், விஜயகுமார், பிரத்தீமா, மோனிகா, ஆகிய 7 பேர் சபைக்கு புதிய வரவுகள். கண்பார்வை குறைவுடன் காணப்பட்ட 15வயதான பிரத்திமா ஜெபத்தால் சுகமானார். மீனாதேவி, அனு, மஞ்சு ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகவும், இப்பணித்தள ஊழியருடைய மாமனார், மாமியாரின் சரீர ஆரோக்கியத்திற்காக ஜெபியுங்கள்.

ஜனவரி 14 **ஷிகார்** சங்:92:13

கரிகன் ராம், ஹிராலால் ராம், உஷாதேவி, கிஷாமுனி தேவி, ஷியாராம், கிஷாபாரோதேவி, ஜிதேந்திர சர்மா, ஆகிய 7 பேர் புதிய தொடர்பில் உள்ளனர். சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்த கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சிறுபிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. திருமணவயதில் உள்ள இப்பணித்தள ஊழியருடைய இரண்டு சகோதரிகளின் திருமணத்திற்காகவும், பிசாசின் பிடியில் தவிக்கும் டாக்டர் சத்தியேந்திர சர்மாவின் மனைவியின் விடுதலைக்காகவும் மற்றும் கமிந்தர் ஷாக் என்பவரின் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் நீங்கவும் ஜெபியுங்கள்.

கஸாப் 1 பேது: 5:7

சாகர்தஹா, குரிகுரி, லலுவானி, பன்கட், சக்கர்தாஹா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தில் சந்திக்கப்பட்ட மனோஜ்ராம் என்பவருடைய குடும்பத்தார் திருமுழுக்குப் பெற ஆயத்தம். கரிகூரி கிராமத்தில் நடைபெற்ற உபவாசக் கூட்டத்தில் 15 பேர் கலந்து கொள்கின்றனர். சக்கரை வியாதியி னால் பாதிக்கப்பட்ட மனோஜ், பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள கிராந்திதேவி மற்றும் மூத்தமகன் சுசில், 12ம் வகுப்பு படிக்கிற இப்பணித்தள ஊழியருடைய மகன் சுசில் ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

வெளிநாட்டினர் தொடர்புக்கு

MR. RAJADURAI
MASCUT - 0096895912309

PASTOR OSWIN MICHAEL
U.S.A. - 0012019936937

MRS. JEYANTHI E. PAUL
BAHRAIN - 0097317215968



PR. SUNDAR SAVARIMUTHU
CANADA - 0016472874853

MR. SIMON HAZLITT
KUWAIT - 00965 - 66877157

Bro. SAM
SINGAPORE - 0065 81987540

உலகச் செய்திகள்

- தவறான சிகிச்சையால் பார்வை இழந்த 66 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க திருச்சியைச் சேர்ந்த கண் மருத்துவமனைக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.
நன்றி: தினமலர்

- மலேசியாவிற்கு கடத்த இருந்த ரூ.2 கோடி மதிப்புள்ள எபிடிரின் என்ற போதை மருந்தை மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். நன்றி: தினமலர்

- பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி விட்டு அதை திருப்பிச் செலுத்தாத 100 தொழிலதிபர்களின் பெயரை வெளியிட வேண்டும் என ரிசர்வ் வங்கிக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
நன்றி: தினமலர்

- சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் நிகழ்ந்த கொடூர சாலை விபத்தில் 17 குழந்தைகள் உட்பட 19 பேர் பலியாயினர். இச்சம்பவம் சீனாவில் பெரும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.
நன்றி: தினமலர்

- மதுரையில் ஒரு கட்சியின் மாநில செயலாளரின் கொலை வழக்கில் பழிக்குப் பழியாக ஜாமின் கையெழுத்திட்டு வந்த 4 பேரை வில்லாபுரத்தில் 10 பேர் கொண்ட கும்பல் ஓட ஓட விரட்டியதில் இருவர் பலியாயினர். நன்றி: தினமலர்

- சி.பி.ஐ.யால் விசாரிக்கப்படும் வழக்குகளைக் கையாள சிறப்பு கோர்ட்டுகள் அமைக்கும்படி மாநில அரசுகளுக்கு பிரதமர் மன்மோகன்சிங் எழுதிய கடிதம் குப்பைத் தொட்டிக்கு போய் விட்டதா? என சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பியுள்ளது.
நன்றி: தினமலர்

(உலக செய்திகளுக்காக ஜெபியுங்கள்)

Edited & Published by T. Samraj for GEMS Educational Media Services, from 58, Pon Nagaram, Tuticorin-628 002. Ph : 0461-2362582. Printed by S. Jairus Ponnaiah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai - 627 002. Ph : 0462-6531119. Director : D. Augustine Jebakumar.

GEMS PROMOTION SERVICE CENTERS

CHENNAI	8, 3rd Jeevan Nagar, Adambakkam, CHENNAI - 600 088. Ph : 044-22670099
CHENNAI	16, Perumal Kovil Street, Nerkundram-600 107 Cell : 9444017330
COIMBATORE	2, Anbu Nagar 4th Street, Vadavalli Road, Edayarpalayam, COIMBATORE - 641 025. Cell : 93448 24072
DINDUGAL	108, Esther Cottage, Round Road, Puthur, Dindugal - 624 005 Cell : 9487859633
ERODE	No.6, Kalai Nagar, Rangampalayam, ERODE - 638 009. Cell : 94869 76202
KODAIKANAL	143-2, Packiapuram, KODAIKANAL-624 101. Cell: 94432 21776
KOVILPATTI	11, Theppakulam Street, KOVILPATTI - 628 501. Ph : 04632 225890
MARTHANDAM	N.S. Building, Kulasekaram Road, MARTHANDAM, K.K.District - 629 165. Cell : 97886 89771
NAZARETH	17-B, Ebenezer Street, NAZARETH - 628 617. Ph : 04639 277820, Cell : 9789464605
SIVAKASI	3/1350/9, Sattur Road, Parraipatti, SIVAKASI - 626 189. Cell : 98430 88840
TIRUNELVELI	No. 2, Jesus House, Ratchakar Street, Murugankurichi, Palayamkottai-627 002 Cell : 98653 11225
TUTICORIN	38, Sarangapani Street, TUTICORIN - 2. Cell : 94422 10629
TUTICORIN	J.S. Traders, Hotel Geetha Complex, Polepettai, TUTICORIN - 628 002. Cell : 94421 66061
VELLORE	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, VELLORE - 632 009. Cell : 99525 45181
TRICHY	36-45, Papa Colony, Edamalaipattipudur, TRICHY - 620 012. Cell : 98949 65520, 94431 88521

REGIONAL PROMOTION CO-ORDINATION CENTRE

CHENNAI	Plot No. 19-A, 3rd St, Megala Nagar, Vengaivasal -600 073 Cell : 94447 63141
MADURAI	Plot No. 21, Sharon Church Street, Booman Nagar-625 018 Cell : 98655 83563
NAGERCOIL	66-E, Bright Street, NAGERCOIL-629 001. Cell:94429 34613
TRICHY	Mahanaim, 1, Abdul Gazoor Street, Kajah Nagar - 620 020 Cell : 94435 55577

OTHER STATE PROMOTION CO-ORDINATION CENTER

BANGALORE	No. 10, 4th Cross (2nd Floor) Oil Mill Road, Lingarajapuram, St. Thomas Town Po, 560 084 Cell : 094485 17025
MUMBAI	B/1013, Station Plaza, Station Road, Bhandup (W), 400 078. Cell : 093227 30294, 098207 01775
PONDICHERRY	Old No. 20, New No. 1, III Cross, 1st Floor, Victoria Nagar - 605 005. Cell : 94867 96631
KERELA	No. T.C. 14/768, Observatory Lane, Palayam, Trivandrum-695 033 Cell : 09486357950, 9447470953

GENERAL PROMOTION CO-ORDINATION CENTRE

GEMS, 10, Thamarai Street, Santhose Nagar, P&T Nagar, MADURAI-625017.
Cell: 94434 29735, E-mail: promotions@gemsbihar.org

Postage Prepaid Posted at Tuticorin BPC

REGD. NEWS PAPER No. : ROC 54651/88
POSTAL Regn. No. : TTN-180 / 2009-2011
Licence to Post without Prepayment No. :
POSTED AT BUSINESS CENTER, TUTICORIN ON 10 & 13.12.2011

Field Office
GEMS, Sikaria, Indrapuri - 821 308.
Rohtas Dt., Bihar. Ph : 06184 - 234567
(Railway Station & Courier Centre : Dehri-on-sone)
Website : www.gemsbihar.org, E-mail : gems@gemsbihar.org

Regd. Office
GEMS, 11,13th Cross St.,
New Colony, Chrompet, Chennai - 44
Ph : 044-22386031
044-22380295

தபாலில் பெற
கூடுதலாக ரூ.25/-

DVD கிடைக்கும் இடங்கள்...

GEMS Educational Media Services

11,13th Cross St., New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

GEMS, 16-A, Chinna Koil Street,
Adaikalapuram, Murugankurichi,
Tirunelveli - 627 002. Ph : 0462-2581131

if undelivered please return to

Promotional Administrative Centre

GEMS, 16-A, Chinna Koil Street, Adaikalapuram, Murugankurichi, Tirunelveli - 627 002. Ph : 0462-2581131 E-mail : nellaioffice@gemsbihar.org

To ....

....

....

....

....

....